# தமிழ் முரசு

# TAMOUL MOURASSOU

முரசு 2

ஒலி 10

ஆவணி 1984

தமிழீழம் தவிர்க்கமுடியாதது




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரசின் பார்வையில்

தமிழ் முரசு - 34

## விஷ விருட்சங்களை வேரோடு களைவோம்.

தமிழ் மக்களின் தலைவிதியோ அல்லது தமிழ்மக்கள் பிறக்கும்போது கூடவே பிறந்துவிட்ட துர்அதிர்ஷ்டமோ தெரியாது தமிழ் மக்களுக்கான ஒரு புரட்சிகரத் தலைமை ஏற்படுவதற்கான காலகட்டம் தொடர்ந்து தள்ளிக் கொண்டே போகிறது. தொடர்ந்தும் தமிழ்மக்களின் தலைமை வெற்றிடமாகவே இருக்கிறது. தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொண்டுள்ள விடுதலை இயக்கங்கள் இணைந்து ஒரு பெரும் சக்தியாக உருவெடுத்து எமது மக்களின் போராட்டத்துக்கு தலைமை தாங்கி ஈழ விடுதலைப் போராட்டத்தை சர்வதேச ஆதரவுடன் முன்னெடுக்கும் என்ற தமிழ் மக்களின் கனவுகள் இன்றும் கனவுகளாகவே இருக்கின்றன.

தினமும் புதுப்புது வடிவங்களில் சந்திக்கும் அடக்குமுறைக் கொடுமைகள், ஈழ விடுதலை இயக்கங்களில் பல இனத்தின் நலனைவிட தமக்கிடையில் ஏற்பட்டுள்ள பேதங்களையும், பிளவுகளையும் பெரிதுபடுத்தி மோதிவருவதால் ஏற்பட்ட விரக்தி இவற்றால் தமிழ் மக்கள் குழம்பியிருக்கும் இந்த நேரத்தை சரியான சந்தர்ப்பமாகத் தீர்மானித்து மீண்டும் புதிதாக அரிதாரம் பூசி வந்து 'அமைதிப் போராட்ட' நாடகங்களை தமிழ் மக்களின் முன்னால் தமிழர் கூட்டணியினர் அரங்கேற்றத் தொடங்கியுள்ளனர்.

இந்தக்கட்டத்தில் அமிர்தலிங்கமும் அவரது சகாக்களும் எமது இனத்துக்கு இழைத்த துரோகத்தை மீண்டும் ஒருமுறை எம்மக்களுக்கு நினைவூட்டும் கடமை எம்மைச் சூழ்ந்துள்ளது. 1977 பொதுத்தேர்தலில் 'தமிழ் ஈழமே முடிந்த முடிபு' எனும் கோஷத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்வைத்து ஆயிரக்கணக்கான எம் இளைஞர்களின் இரத்தங்களை திலகங்களாகச் சூடியவர்கள் எமது மக்களின் இரத்தங்கள் ஈழவீதிகளில் சிந்தத் தொடங்கியதும் எங்கே சென்றார்கள். தம்மைக் காப்பாற்றிக் கொண்டால் போதும் என்று தமிழ் நாட்டுக்கு ஓடி ஒழிந்து அங்கே மீண்டும் தமது வசதிகளைப் பெருக்கிக் கொண்டு இன்று மக்கள் இழந்துள்ள இந்த நிலையை தங்கள் அரசியல் மீள்பிரவேசத்துக்குப் பாவிக்க முற்பட்டுள்ளனர்.

இன்னும் அதி உத்தமர் ஜெயவர்த்தன 'வட்ட மேசை'யில் வைத்து தமிழ் ஈழத்தை தங்கத் தாம்பாளத்தில் இட்டுத் தருவார் என்றும், அமைதித் தீர்வை அதி உத்தமர் அள்ளித் தருவார் என்றும் தமது அரசியல் பித்தலாட்டங்களைத் தொடரும் அமிர்தலிங்கத்தின் 'துரோகங்கள் ஜெயவர்த்தனவின் அடக்குமுறைக் கொடுமையிலும் குறைந்ததல்ல என்பதை எமது மக்களுக்கு மீண்டும் நினைவூட்டுகிறோம்.

தொடர்ச்சியாக விடுதலை இயக்கங்களிடையே பிளவுகள் அதிகரித்துக் கொண்டு போவதற்கும் இன்று இயக்கங்களிடையே உட்பூசல்கள் வலுக்க ஆரம்பித்திருப்பதற்கும் இந்த தரகு முதலாளித்துவத் தலைமையே காரணம் என்பதில் எமக்கு எந்தவித ஐயமும் இல்லை. எனவே இவர்களை அம்பலப்படுத்துவதும், அழிவோடு ஒதுக்குவதும் இன்று வரலாறு எம்மீது திணித்துள்ள கடமையாகிறது.

இந்தக் கட்டத்தில் மார்க்சிசத்தை மேலகவாகவும், சோசலிசத் தமிழ் ஈழத்தை இலட்சியமாகவும் கொண்டு இயங்கிவரும் ஈழவிடுதலை இயக்கத்தினை நாம் கேட்கிறோம் - நீங்கள் இனத்தின் நன்மை கருதி பேதங்களையும், பிளவுகளையும் மறந்து ஒன்றுபடப் போகிறீர்களா அல்லது தமிழ் மக்கள் மீண்டும் இந்தத் தரகு முதலாளித்துவத் தலைமையால் ஏமாற்றப்படுவதை அனுமதிக்கப் போகிறீர்களா? இந்த தரகு முதலாளித்துவத் தலைமையின் சக்தியை நாம் குறைவாக மதித்து விடக்கூடாது. இவர்கள் விஷ விருட்சங்கள். வெட்டத் தளைப்பவர்கள். இவர்களின் சதிகளை வேரறுக்க வேண்டுமாயின் நமக்கிருக்கும் ஒரே வழி ஈழவிடுதலை இயக்கங்கள் அனைத்தும் ஒன்றிணைந்த ஒரு புரட்சிகர இயக்கத்தை தோற்றுவிக்க வேண்டும். செய்யமறுத்தால் எமது விடுதலை பின்னடைவைப் பெறுவதை தவிர்க்கமுடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாமியத் தோழர்களின் கரங்களைப் பலப்படுத்துவோம்!
# இஸ்ரேலியரை ஈழத்திலிருந்து விரட்டியடிப்போம்!




சர்வதேசப் பயங்கரவாகத்தின் தந்தைகளான இஸ்ரேலிய 'மொஸாட்' வெறிப் படையினரின் துணையுடன் ஈழத்தில் இன்று ஜெயவர்த்தனாவின் அரசபடையினர் தமது சித்திரவதை வெறியாட்டங்களுக்கு புது மெருகினை ஊட்டியுள்ளனர். தினந்தோறும் பல நூற்றுக்கணக்கான அப்பாவி தமிழ்– முஸ்லீம் இளைஞர்கள் வதைமுகாம்களுக் இழுத்துச் செல்லப்படுவதும் அங்கு அவர்கள் 'மொஸாட்' மிருகப் படையினர் போதித்த புதிய சித்திரவதை முறைகளால் சித்திரவதை செய்யப்படுவதும் இன்று ஈழத்தில் கண்ணீர்க்கதைகளாகி விட்டன. பலநூற்றுக்கணக்கான இளைஞர்கள் வதைமுகாம்களில் வைத்து பிரத்தியோக போதை மருந்து ஊசிகள் மூலம் ஏற்றப்பட்டு தமது சக்திகளை இழந்து வெறும் நடைப்பிணங்கள் ஆகியிருக்கின்றார்கள். வீதிக் கடைகள், வீடுகள் தோறும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோதனைகள், இளைஞர்கள் கண்ட இடத்தில் கைது, கைது செய்யப்பட்டவர்கள் மீது காட்டுமிராண்டித்தனமான சித்திரவதைககளி அலலது தப்பியோட முயன்றார்கள் சுட்டோம் என்ற பொய்யுரைகள் என்றெல்லாம் இன்று ஈழ வீதிகளில் இஸ்ரேலிய வெறிநாய்களின் குரூரத்தனம் எமது மக்களின் இரத்தத்தால் எழுதப்படுகிறது.

இலத்தீன் அமெரிக்க நாடுகளின் இராணுவ அரசாங்கங்களுக்கும் தென்னாபிரிக்கா இனவெறி அரசாங்கத்திற்கும் பக்கபலமாக இருந்து வரும் சியோனிச வெறியர்கள் பல்லாயிரக்கணக்கான பாலஸ்தீனிய உயிர்களைத் துடிக்கத் துடிக்கப் பலி வாங்கிய பாவிகள் அந்த இரத்தக்கறைகள் உலர்வதற்கு முன்னரேயே ஈழத்தில் தமது பாசிசக் கரங்களைப் படர விட்டுள்ளார்கள்.

அதேவேளையில் ஜெயவர்த்தன அரசினது உண்மைச் சொரூபமும் இப்போது வெளியாகியுள்ளது. தம்மை அரபு உலகின் நண்பனாகவும், பாலஸ்தீன விடுதலையின் பிரதம ஆதரவாளனாகவும் காட்டி இதுவரை காலமும் நடித்து வந்த ஜெயவர்த்தனவின் அரசு தனது ஏகாதிபத்திய விசுவாசத்தை வெளிக்காட்டவேண்டிய நிலைக்கு வந்துள்ளது.

காலா காலமாக அரபு நாடுகள் அளித்து வந்த நிதி உதவிகளில் தனது பொருளாதாரத்தை இழுத்துப் பிடித்து நிறுத்தி வந்த சிறிலங்கா அரசு இன்று அந்த நன்றிகள் அனைத்தையும் மறந்து அந்தத் தோழமை நாடுகளின் முதுகிலே கத்தியால் குத்தியுள்ளது. இன்னும் சிறிலங்காவின் பொருளாதாரத்தின் பெரும்பகுதி மத்திய கிழக்கு நாடுகளிலேயே தங்கியுள்ளதை மறந்தே சிறிலங்கா அரசு இந்த வஞ்சகச் செயலை செய்துள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1983ம் ஆண்டில் மத்திய கிழக்கில் பணிபுரியும் சிறிலங்கா தொழிலாளர்கள் மூலம் இலங்கைக்கு 6.85மில்லியன் ரூபா (270மில்லியன்அமெரிக்க டொலர்கள்) கிட்டியுள்ளது. அடுத்ததாக மத்திய கிழக்கு நாடுகளுக்கான தேயிலை விற்பனை மூலம் 330 மில்லியன் அமெரிக்க டொலர்களையும் சம்பாதித்துள்ளது. சிறிலங்காவின் தேயிலையில் பெரும் பகுதியை வாங்கும் பாகிஸ்தான் முதல் மொராக்கோ வரை பெரும்பாலான நாடுகள் இஸ்லாமிய நாடுகளே. அது மாத்திரமல்ல லிபியா உட்பட பல வளைகுடா நாடுகள் தொடர்ச்சியாக பெரும் நிதி உதவிகளை சிறிலங்கா அரசுக்கு வழங்கி வருகின்றன. இதே வளைகுடா நாடுகள் இலங்கைக்கு எரிபொருட்களை குறைந்த சலுகை விலையிலேயே வழங்கிவருகின்றன. அனைத்துக்கும் மேலாக மத்திய கிழக்கில் பணி புரிபவர்களில் ஏறத்தாழ ஒரு இலட்சம் பேர் சிறிலங்காவின் பெரும்பான்மை இனத்தவர்கள்.

இத்தனை இருந்தும் அரபு உலகின் விரோதிகளான இஸ்ரேலியர்களைக் கொண்டுவந்து குவித்து இலங்கையில் வாழும் இஸ்லாமிய மக்களின் எதிர்ப்புக்கள் அனைத்தையும் அலட்சியப்படுத்தி காட்டுத் தர்பார் நடத்த முயலும் சிறிலங்கா அரசுக்கு புதிய பாடம் ஒன்றை நாம் புகட்டவேண்டும். அதுமாத்திரமல்ல, காலாகாலமாக தமிழ்– முஸ்லீம் மக்களின் தரகு முதலாளித்துவத் தலைமைகள் தங்கள் பதவிச் சுகங்களைப் பாதுகாப்பதற்காக தமிழ்– இஸ்லாமிய சமூகங்களைப் பேதப்படுத்தியும் பிளவுபடுத்தியும் வந்துள்ளன. தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இஸ்லாமிய மக்களை ஏதோ ஒரு வித சம்பந்தமும் அற்றவர்களாக முதலாளித்துவச் செய்திச் சாதனங்கள் மூலம் வெட்டி முழங்கி வந்தன , இன்று அந்தப் பொய்கள் யாவும் கலைந்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலா காலமாக தமிழ், இஸ்லாமிய மக்களை ஏமாற்றிவந்த தரகு முதலாளித்துவத் தலைமைகள் தகர்க்கப்பட்டு அந்திம கட்டத்தை நெருங்கிவிட்டன. இரு சமூக மக்களும் பொது எதிரியை முறியடிக்கும் போராட்ட முன்னெடுப்புகளில், தமிழ் பேசும் மக்களின் பிரச்சனைக்கு ஒரே தீர்வு தமிழ் ஈழமே என்பதில் ஐக்கியப்பட ஆரம்பித்துள்ளனர். இந்தக்கட்டத்தில் நாம் தமிழ் மக்கள் யாவரும் இஸ்லாமிய மக்களின் போராட்ட முன்னெடுப்புகளில் அவர்களின் கரங்களைப் பலப்படுத்துவோம். ஈழத்திலிருந்து இஸ்ரேலியர்களை விரட்டியடிக்க இணைந்து போராடுவோம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறீலங்கா அரசின் எதிர்ப்புரட்சித் தயாரிப்புக்கள்.

ஈழவிடுதலைப் போராட்டத்தை அடக்குவதற்கான சகல எதிர்ப்புரட்சித் தயாரிப்புக்களையும் இன்று ஏகாதிபத்திய எஜமானின் துணையுடன் சிறீலங்கா அரசு மேற்கொள்ள ஆரம்பித்துவிட்டது.

இஸ்ரேலிய மொசாட், பிரித்தானிய எஸ்.ஏ.எஸ் கூலிப்படைகள் என்று இதுவரை படைகளுக்குப் பயிற்சியளித்து வந்த சிறீலங்கா அரசு அந்த வரிசையில் தற்போது சீனாவையும் நாடியுள்ளது. இதுவரை வரலாற்றில் முதற்தடவையாக இலங்கைக்கு விஜயம் செய்த சீன விமானப்படைத் தளபதி விடுதலைப் போராளிகளை அழிக்க சிறீலங்கா படைகளுக்கு விசேட பயிற்சிகளையும், கருவிகளையும் வழங்குவதாக உறுதி அளித்துள்ளார்.

சிறீலங்கா கடற்படையின் இன அழிப்பு நடவடிக்கைகளுக்கென 16 கோடி 82 இலட்சம் ரூபா விசேட நிதி ஒதுக்கப்பட்டு 34 புதிய கப்பல்களும் கொள்வனவு செய்யப்பட்டிருக்கின்றன.

இது தவிர லங்கா அதுலிய, ரங்கா அகில, லங்கா அதித்த ஆகிய கப்பல்களில் பெருந்தொகையான லேசர் துப்பாக்கிகள், கண்ணீர் புகைக் குண்டுகள், துப்பாக்கிக் குண்டுகள், வெடி மருந்துகள், ஒளியேற்றும் சாதனங்கள், மற்றும் நவீன ரக ஆயுதங்கள் ஆகியவற்றையும் சீனாவிலிருந்து பீரங்கிப் படகுகளையும், பாகிஸ்தானிலிருந்து கவசவாகனங்களையும் சிறீலங்கா அரசு பெற்றுள்ளது.

ஆக்கிரமிப்பு அரசின் இந்த எதிர்ப்புரட்சித் தயாரிப்புக்களை ஈழவிடுதலை இயக்கங்கள் ஐக்கியப்படாமல் ... தமிழீழப் போராட்டத்துக்கு சர்வதேச ஆதரவு திரட்டாமல் முறியடிக்கமுடியுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் ஈழ... தமிழக... சிறீலங்கா செய்திகள்

## தமிழ் ஈழமெங்கும் பூரண ஹர்த்தால் - கடையடைப்பு!

கடந்த வருடம் யூலை மாதம் சிறீலங்கா பேரினவாத வெறியாட்டத்திற்குப் பலியான தமிழ் மக்களின் நினைவாகவும், வெலிக்கடைச் சிறையில் கோரத்தனமாக வெட்டிச் சாய்க்கப்பட்ட விடுதலைப் போராளிகளை நினைவு கூரும் முகமாகவும் தமிழீழ விடுதலை இயக்கங்களால் ஏற்பாடு செய்யப்பட்ட (25,26ஆம் திகதிகளில்) ஹர்த்தால், கதவடைப்பு ஆகியன பூரண வெற்றியடைந்துள்ளது. கடந்த காலங்களில் அநுஷ்டிக்கப்பட்ட ஹர்த்தால்களை விஞ்சுமளவிற்கு இந்த ஹர்த்தால் இருந்தது. அரச அலுவலகங்கள் கூட ஸ்தம்பித்து விட்டன. கடந்த காலங்களை விட இம்முறை கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த பெருந்தொகையான இஸ்லாமிய மக்கள் ஹர்த்தாலை அநுஷ்டித்தது குறிப்பிடத்தக்கது.

அதே வேளையில் ஆக்கிரமிப்பு அரசு குவித்திருந்த படைகளையும் மீறி வெலிக்கடைச் சிறையில் கொல்லப்பட்ட போராளிகளின் நினைவாக 53 வெடிகுண்டுகளை அரச அலுவலகங்கள் மீது வீசி தமது வீர வணக்கங்களை போராளிகள் செலுத்தினர்.

## கூட்டணியினர் உண்ணாவிரதம் - இளைஞர்கள் எதிர்ப்பு!

மீண்டும் தமிழ் மக்கள் மத்தியில் தமது ஏமாற்று நாடகங்களை தொடரும் வகையில் தமிழர் கூட்டணியினர் 24.07.84 அன்று நல்லூர் வீரமகாகாளி அம்மன் கோவில் முன்றலில் நடத்திய உண்ணாவிரத நாடகம் இளைஞர்களின் தலையீட்டால் குறிப்பிட்ட நேரத்துக்கு இரண்டு மணித்தியாலங்கள் முன்னரே நிறுத்தப்பட்டது. ஏறத்தாழ 150 ஆண்களும் பெண்களும் கலந்து கொண்டனர். உண்ணாவிரதம் ஆரம்பமாக முன்னர் காலை 5 மணியளவில் ஆலய முன்றலில் மூன்று கைக்குண்டுகள் வெடித்தன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ் நகர் சீல்வைக்கப்பட்டு ஆயுதப்படைகள் தேடுதல் வேட்டை.

தமிழீழ விடுதலை இயக்கங்களின் வேண்டுகோளை ஏற்று யாழ் நகரின் வர்த்தக நிலையங்கள் இருதினங்கள் பூரண கதவடைப்பை மேற்கொண்ட மறுதினம் யாழ் நகர் ஆக்கிரமிப்பு அரசபடைகளால் சீல் வைக்கப்பட்டு விடுதலைப் போராளிகளைத் தேடி பெரும் தேடுதல் வேட்டை மேற்கொள்ளப்பட்டது. வர்த்தக நிலையங்கள், வீடுகள் ஆகியன சோதனைக்குள்ளாகின.

அதே வேளையில் யாழ் நகரெங்கும் வெலிக்கடையில் கொல்லப்பட்ட விடுதலைப் போராளிகளுக்கு வீரவணக்கம் கூறி ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டிகளை துப்பாக்கிமுனையில் அப்பாவி இளைஞர்களைக் கொண்டு அரசபடையினர் அகற்றினார்.

## அரசபடையினரின் வெறியாட்டத்திற்கு தொடர்ந்து பல தமிழ் இளைஞர்கள் பலி.

ஆக்கிரமிப்புப் படையினரின் சித்திரவதை மற்றும் வெறியாட்டங்கள் தொடர்ந்து பல தமிழ் இளைஞர்களின் உயிர்களைப் பலிவாங்கி வருகின்றன. 26.05.84 அன்று அரசபடையினரால் கைது செய்யப்பட்டு 'விசாரணைக்' கு இழுத்துச் செல்லப்பட்ட ஆனைக்கோட்டையைச் சேர்ந்த **பஞ்சரட்ணம் (பாபு)** கொடிய சித்திரவதைகளால் 6.06.84 இல் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் மரணமானார். திருக்கேதீஸ்வரத்தைச் சேர்ந்த இளைஞன் மன்னாரில் வைத்துக் கைது செய்யப்பட்டார். 'விசாரணை'யின் பின்னர் அவரது உயிரற்ற உடல் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டது. 15.07.84 அன்று இராணுவக் காவலில் வைக்கப்பட்டிருந்த **ராஜேந்திரராசா வசந்தராசா (வசந்தா)** மாவிலங்கைத்தில் வைத்து ஆக்கிரமிப்புப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார். வல்வெட்டித்துறையில் மீன் பிடிக்கச் சென்ற 19 வயது இளைஞன் **நல்லவன்** அரசபடையினரின் துப்பாக்கிக்கு இரையானார். 17.07.84 அன்று தொண்டமனாற்றில் வைத்து மோட்டார் சைக்கிளில் சென்ற **ரஞ்சன் லாலா** எனும் இளைஞன் அரசபடையினரால் சுட்டுக் கொல்லப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டார். இவர் தமிழ் ஈழ விடுதலைப் புலி இயக்கத்தின் முக்கிய உறுப்பினர் என பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன. 14.07.84 அன்று சுன்னாகம் பொலிஸ் பகுதியில் வைத்து கனகநாயகம் ராஜமோகன் எனும் இளைஞரும் ஆக்கிரமிப்புப் படையினரால் மோட்டார் சைக்கிளில் செல்லும்போது சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

அதே வேளையில் 18.07.84 அன்று யாழ். குருநகர் பழைய பூங்கா வீதியில் மோட்டார் சைக்கிளில் வந்த இரு இளைஞர்கள் - மாணிக்கவாசகர் (19 வயது) மொறிஸ் றெஜினோல்ட் (23 வயது) - இராணுவத்தினர் சோதனையிட முயன்ற போது இருவரும் சைனட் அருந்தி தற்கொலை செய்து கொண்டனர்.

## தொடர்ந்து பல கொள்ளைகள்.

பலத்த பாதுகாப்புகளின் மத்தியிலும் தமிழீழமெங்கும் நடந்து வரும் பெரும் கொள்ளைகள் ஆக்கிரமிப்பு அரசுக்கு பெரும் அச்சத்தை ஊட்டியுள்ளன. 2.07.84 அதிகாலை 2.30 மணியளவில் கிளிநொச்சி இலங்கை வங்கிக் கிளையில் பெருந்தொகையான பணம் இரும்புப் பெட்டியுடன் களவாடப்பட்டிருக்கிறது. 6.07.84 வெள்ளியன்று துணுக்காய் ப.நோ.கூ.சங்கத்திற்குச் சொந்தமான 21,815 ரூபா பணமும், 61,649 ரூபா பெறுமதியான காசோலைகளும் ஆயுதம் ஏந்திய இளைஞர்களால் துணிகரமாகக் கொள்ளையிடப்பட்டன. 22.07.84 அன்று சுமார் 25 வாலிபர்கள் யாழ். பல்கலைக் கழகத்துள் புகுந்து ஆய்வுகூடத்திலிருந்து இரசாயனப் பொருட்களை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர். இதுபோல 23.07.84 நண்பகல் யாழ். திருநெல்வேலிச் சந்தியில் உள்ள நல்லூர் கூ.மொ.வி நிலையத்திற்குச் சொந்தமான இரு இலட்சம் ரூபா பணமும் பல ஆயிரம் பெறுமதிவாய்ந்த காசோலைகளும் இளைஞர்களால் கொள்ளையிடப்பட்டன. 24.07.84 அன்று மட்டக்களப்பில் உள்ள பாதணி விற்பனை நிலையத்தில் 60,000 ரூபா பணம் கொள்ளையடிக்கப்பட்டது. 10.07.84 நள்ளிரவு மல்லாகம் நீதிமன்றக் களஞ்சியம் கொள்ளையடிக்கப்பட்டு ரூ.2 லட்சம் பெறுமதியான நகைகள், தட்டச்சுயந்திரம் போன்றவை எடுக்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "தமிழ் நாட்டிலும் புகலிடம் பெற்றுள்ள அகதிகளில் நானும் ஒருத்தி" - விடுதலைப் புலிகளால் சிறை மீட்கப்பட்ட நிர்மலா நித்தியானந்தன்.

1982 - நவம்பர் மாதத்தில் கைது செய்யப்பட்டு நீண்ட காலமாக சிறீலங்கா அரசபடைகளின் சித்திரவதைகட்கு உள்ளாகி சிறை வைக்கப்பட்டிருந்த நிர்மலா நித்தியானந்தனை பலத்த பாதுகாப்புக்களையும் மீறி மட்டுநகர் சிறையிலிருந்து தமிழீழ விடுதலைப்புலி இயக்கத்தினர் கடந்தமாதம் 10ம் திகதி மீட்டிருந்தனர். தற்போது இந்தியாவுக்கு தப்பி வந்துள்ள திருமதி நிர்மலா நித்தியானந்தன் பத்திரிகையாளர்க்கு அளித்த பேட்டியொன்றில் "எங்கள் வேலைகள் எல்லாம் இலங்கைத் தீவுக்குள் தான் உள்ளன. தென்னிந்தியா இலங்கைத் தமிழ் பயங்கரவாதிகளுக்கு புகலிடம் அளிப்பதான குற்றச்சாட்டு உண்மையற்றது. இலங்கையில் இருந்து 30 ஆயிரத்துக்கும் அதிகமான தமிழ் அகதிகள் தமிழ் நாட்டில் உள்ளனர். நானும் அவர்களில் ஒருத்தி", எனவும் மனித உரிமைகள் மீறல், பெண்கள் விடுதலை இவற்றுக்காகத் தாம் தொடர்ந்து போராடப் போவதாகவும் தெரிவித்துள்ளார்.

## அம்பாறை 'சென்ரல் காம்ப்' பொலிஸ் நிலையம் போராளிகளால் தாக்கப்பட்டது.

3.07.84 செவ்வாய்க்கிழமை அன்று அம்பாறை மாவட்டத்திலுள்ள பட்டிருப்புத் தொகுதியின் எல்லையோரமாக உள்ள சென்ரல் காம்பிலுள்ள பொலிஸ் நிலையம் விடுதலைப் போராளிகளால் குண்டுவீசித் தாக்கப்பட்டதுடன் அங்கிருந்த 20 துப்பாக்கிகளும், 2 இயந்திரத் துப்பாக்கிகளும், தோட்டாக்களும் போராளிகளால் கைப்பற்றப்பட்டன. இச்சம்பவத்தில் இரு சிறீலங்கா பொலிசார் காயம் அடைந்துள்ளனர். இப் பொலிஸ் நிலையம் சமீபகாலங்களில் தமிழ் இளைஞர்களை சித்திரவதை செய்வதில் முன்னணியில் நின்றது. இத்தாக்குதல் சம்பவத்திற்கு தமிழ் நாடு மக்கள் விடுதலைக் கழகம் உரிமை கோரியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "இராணுவக் கெடுபிடிகளே இனப்பிரச்சினைக்குக் காரணம் ....." – டயான் ஜயந்திலகா.

'இலங்கையின் இனப்பிரச்சினைக்கு நீண்டதொரு வரலாறு இருந்த போதிலும் தற்போதைய நெருப்பு நிலைக்கு அரசின் சமூக பொருளாதாரச் சீர்கேடுகளும், வெளிநாட்டுக் கொள்கைகளும், இராணுவக் கெடுபிடிகளுமே அடிப்படைக் காரணங்களாக விளங்குகின்றன' என கொழும்பு பல்கலைக் கழக விரிவுரையாளரும் பத்திரிகையாளருமான டயான் ஜயந்திலகா கூறியுள்ளார். இலங்கைத் தமிழர் பிரச்சினை இன்று சர்வதேசப் பிரச்சினை ஆகியுள்ளதுடன் இந்தியாவின் அரசியலிலும் முக்கியத்துவம் பெற்றுவிட்டது எனக் குறிப்பிட்ட அவர் வளர்ந்துவரும் இரு இனவாத தேசியவாதத்தையே இன்று காண்பதாகவும் இது தமிழர் பிரச்சினையை வளர்த்து வருவதாகவும் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## தொடர்ந்தும் பெருந்தொகையான தமிழ் இளைஞர்கள் அரசபடைகளால் கைது!

சிறீலங்காவின் ஆக்கிரமிப்பு அரசபடைகள் தொடர்ச்சியாக அப்பாவித் தமிழ் இளைஞர்களை வேட்டையாடி கைது செய்து வருகிறது. 26.06.84 அன்று யாழ். பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த சந்திரகுமார், சகாப்டீன், கேதீஸ்வரன் ஆகியோர் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். 23.06.84 அன்று 20 பாடசாலை மாணவர்கள் மட்டுநகரில் கைது செய்யப்பட்டுள்ளனர். மட்டுநகரில் நடந்த சிலதினங்களில் 200க்கும் மேற்பட்ட இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். 12.07.84 அன்று ஏழாலை தெற்கில் இரு இளைஞர்கள் கைது செய்யப்பட்டதையடுத்து கிளிநொச்சிப் பகுதியில் மேலும் நேவடும் கரவெட்டி, பருத்தித் துறை, இருநகர், தையிட்டி ஆகிய பகுதிகளில் இருந்து 11 இளைஞர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். ஆனையிறவு தடைமுகாமில் வைத்து மேலும் 4 இளைஞர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரான்சில்....

## 'ஈழம் ஒரு கண்ணோட்டம்' - ஈழப் புரட்சி அமைப்பின் கருத்தரங்கு.

'ஈழம் ஒரு கண்ணோட்டம்' எனும் தலைப்பிலான ஆய்வுக் கருத்தரங்கு ஒன்று ஈழப் புரட்சி அமைப்பின் பிரான்சுப் பிரிவினரால் 8.07.84 ஞாயிறு அன்று நடத்தப்பட்டது. வேறுபட்ட தலைப்புக்களுடனான கருத்துக்கள் இங்கு பரிமாறப்பட்டன.

## தமிழகப் பிரதிநிதிகள் பங்கு கொண்ட ஒருங்கிணைப்புக் குழுவின் பொதுக் கூட்டம்.

காமராஜ் காங்கிரஸ் தலைவர் திரு. நெடுமாறன், டெல்லிப் பாராளுமன்றத்தின் தி.மு.க. உறுப்பினர் திரு. கோபால்சாமி, மதுரை ஆதீன கர்த்தர் திரு. ஞானசம்பந்தர் ஆகியோர் பங்கு கொண்ட பொதுக் கூட்டமொன்று 15.07.84 அன்று தமிழர் ஒருங்கிணைப்புக் குழு (பிரான்சு) ஒழுங்கு செய்து நடந்தது.

## பாரிசில் 'தமிழீழக் குரல்' - தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் ஒலிபரப்பு.

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் ஒலிபரப்பு நிகழ்ச்சியான 'தமிழீழக் குரல்' பிரதி ஞாயிறு தோறும் காலை 10 மணி தொடக்கம் 12 மணிவரை F.M. 106 அலைவரிசையில் ஒலிபரப்பாகிறது. இந்நிகழ்ச்சி மேற்படி கழகத்தின் பிரான்சுப் பிரிவினரால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகும்.

## எல். கணேசன் கலந்து கொண்ட பொதுக்கூட்டம்.

இந்தியப் பாராளுமன்றத்தின் தி.மு.க. உறுப்பினர் திரு. எல். கணேசன் கலந்து கொண்ட பொதுக் கூட்டமொன்று 29.07.84 இல் பாரிசில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக விரோதக் குற்றச் சாட்டுக்களின் பேரில் பலர் தொடர்ந்து படுகொலை.

சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டுவந்த பலர் தொடர்ச்சியாக விடுதலை இயக்கங்களால் விசாரிக்கப்பட்டு 'மரண தண்டனை' அளிக்கப்பட்டு வருகிறார்கள். அதே வேளையில் இதை வாய்ப்பாகப் பயன்படுத்தி அரசபடையினரும், தனிப்பட்ட சில சுயநலமிகளும் பலரைக் கொலை செய்து வருவதாகத் தெரிகிறது. முன்னெப்போதும் இல்லாத வகையில் கடந்த சில நாட்களில் அதிகரித்த இக்கொலைகள் பற்றிய சில விபரங்கள்....

- 8.07.84 அன்று காலையில் யாழ்ப்பாணம் தட்டா தெருச் சந்தியில் கொட்டடியைச் சேர்ந்த அருளானந்தம் பிரேம்நாத் அல்லது அரசன் (24 வயது) என்பவருடைய உடலும், பெருமாள் கோவிலுக்கு அருகாமையில் மானிப்பாயைச் சேர்ந்த சிறீநாத் அல்லது நாலன் (23 வயது) என்பவருடைய உடலும் ஓட்டுமடத்திற்கு அருகில் செல்லத்தம்பி கனகேஸ்வரன் அல்லது தீபா (30 வயது) என்பவருடைய சடலமும் காணப்பட்டன. இம்மூவரும் நீண்ட காலமாக பல குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக தேடப்பட்டவர்களென பொலிஸ் அறிக்கை கூறுகிறது. இம்மரணங்களுக்கு தமிழ் ஈழ மக்கள் விடுதலைக் கழகம் உரிமை கோரியுள்ளது.

- யாழ். புங்கன்குளம் புகையிரத நிலையத்திற்கு முன்பாக மின்சாரக் கம்பம் ஒன்றில் கட்டப்பட்டு நிலையில் சுட்டுக் கொல்லப்பட்ட அரியாலையைச் சேர்ந்த கறுப்பையா இரங்கன் (20 வயது) இன் உடல் கண்டெடுக்கப்பட்டது. இவனது மரணத்துக்கு தமிழீழ விடுதலைப் புலி இயக்கம் பொறுப் பேற்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- 12.07.84 காலை யாழ். வெலிங்டன் தியேட்டர் சந்தியில் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த செல்லையா சிறீதரனின் (வயது 25) சுட்டுக் கொல்லப்பட்ட சடலம் கண்டெடுக்கப்பட்டது. சில குற்றச் செயல்கள் தொடர்பாக பொலிசாரால் தேடப்பட்டு வந்த இவரின் மரணத்துக்கு தமிழ் ஈழ விடுதலை இராணுவம் பொறுப்பேற்கிறது.

- மயிலிட்டியில் இனம் தெரியாத 52 வயதுடைய ஒருவர் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டு அவரது சடலம் மின்கம்பத்தில் கட்டப்பட்டிருந்தது.

- மட்டக்களப்பில் உள்ள சின்ன ஊறணியில் மு. நிமலராஜா என்பவர் சுடப்பட்டு அவரது உடல் மின்கம்பத்தில் தொங்கவிடப்பட்டிருந்தது.

- புளியங்குளப் பகுதியில் வி. சற்குணராஜன் என்பவரும் இவ்வகையில் கொல்லப்பட்டுள்ளார்.

விசாரணை, தீர்ப்பு வழங்கல், தண்டனைகளை நிறைவேற்றுதல் ஆகிய அனைத்து அதிகாரங்களையும் தமது கரங்களில் எடுத்துக் கொண்டு செயற்படும் விடுதலை இயக்கங்களுக்கு நாம் கார்ல் மார்க்ஸ் கூறியதையே கூற விரும்புகிறோம்....

குற்றங்களுக்காக தனிமனிதனைத் தண்டிக்க கூடாது. குற்றங்களின் சமூக விரோத பிறப்பிடங்கள் அழிக்கப்பட வேண்டும்.

— கார்ல் மார்க்ஸ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்க்கப் போராட்டம் உருவெடுக்கட்டும்

காசி

பூமிச் சுற்று வட்டத்தில் புரட்சியின் சகாப்தம் ஏற்கனவே தொடங்கிவிட்டது: புரதான சமுதாயம் பிரபுத்துவ சமுதாயமாகவும், பிரபுத்துவ சமுதாயம் முதலாளித்துவ சமுதாயமானதும், முதலாளித்துவத்தின் வளர்ச்சியின் உச்சக்கட்டம் ஏகபோக நிலை எய்தியதும் இவையனைத்தும் தொழிற்துறை வளர்ச்சியின் நிகழ்வுப்போக்கில் உருக்கொண்ட சமுதாய அமைப்புக்களின் வடிவங்களே.

நிலத்தை பொதுவுடமையாகக் கொண்டிருந்த புராதான சமுதாயங்களைத் தவிர ஏனைய சமுதாய அமைப்புக்கள் ஒவ்வொன்றும் வர்க்க முரண்பாடுகள் உள்ள சமுதாய அமைப்புக்களாகவே இருந்து வந்தன. முதலாளித்துவ சமுதாய அமைப்பானது நவீன தொழில் துறையின் வளர்ச்சிக்கேற்ப அதன் தன்மை விரிவடைந்தும் வளர்ச்சியுற்றும் வருகின்றது. தனி ஒரு வர்க்கத்தின் நலன்களையே பேணுகின்ற இச்சமுதாய அமைப்பானது முன்னைய சமுதாயங்களைப் போலல்லாது வர்க்கங்களின் எண்ணிக்கையினைக் குறைத்து ஒன்றுக்கொன்று எதிரான இரு பெரும் வர்க்கங்களை தோற்றுவித்துள்ளது. முதலாளித்துவ சமுதாய அமைப்பின் வளர்ச்சியில் வர்க்கங்களின் நிலைப்பாடுபற்றி கார்ல் மார்க்ஸ் பின்வருமாறு எடுத்துரைக்கின்றார்.....

"பிரபுத்துவ சமுதாயத்தின் இடிபாடுகளில் இருந்து முளைத்தெழுந்துள்ள தற்காலிக முதலாளித்துவ சமுதாயம் வர்க்கப்பகைமைகளுக்கு முடிவு கட்டிவிடவில்லை, பழையவற்றின் இடத்தில் புதிய வர்க்கங்களையும் புதிய ஒடுக்குமுறை நிலைமைகளையும், புதிய போராட்ட வடிவங்களையும் நிலைநாட்டி இருக்கிறதேயன்றி வேறில்லை"...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாளி—பாட்டாளி என்ற இரு பெரும் வர்க்கங்களை உருவாக்கிவிட்டஇந்த முதலாளித்துவ சமுதாய அமைப்பானது ஒரு சிறிய அளவிலான எண்ணிக்கையினைக் கொண்ட ஒரு வர்க்கத்தின் நலன்களுக்காக மனித சமுதாயத்தினை நாசம் செய்து வருகிறது. மிருகத்தனமான சுரண்டலை நிலை நாட்டி மனித உழைப்புச் சக்தியினை ஓர் பரிவர்த்தனைப் பண்டமாக மாற்றியிருக்கிறது. சமூக உற்பத்தி உறவுகளில் இடையறாத மாறுதல்களை ஏற்படுத்தி வருவதுடன் கொண்டுவரப்பட்ட ஒரு மாறுதல் நிலை கொள்வதற்கு முன்னர் அடுத்து வரும் புதிய மாற்றங்கள் அதனைப் பழமைப்படுத்தி விடுகின்றன. இவ்வாறாக சுரண்டலையும், இடையறாத மாறுதல்களைச் செய்வதிலும் தனது ஆன்மாவை உள்ளடக்கியிருக்கும் நெருக்கடி மிக்க முதலாளித்துவ சமுதாய அமைப்பில் நசுக்கப்பட்டும் சுரண்டப்பட்டும் தனது மேலான உழைப்புச் சக்தியினை குறைந்த விலைக்கு விற்று வாழ்க்கையினை ஓட்டவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாக்கப்பட்டிருக்கும் பாட்டாளி வர்க்கமானது தனது உழைப்புச் சக்தியில் மேலெழுந்து நின்று மேலும் தன்னை அடக்கவேண்டிய ஆயத்தங்களை செய்து கொண்டிருக்கும் இந்த மூர்க்கத்தனமான சமுதாய அமைப்பினை உடைத்தெறிய வேண்டுமென்று உணர்ந்துவிட்ட காலகட்டம் இன்று உருவாகிவிட்டது. முதலாளித்துவ சமுதாய அமைப்பின் தொழிற்துறை வளர்ச்சிப் போக்கில் ஒழுங்கமைந்த பாட்டாளி வர்க்கம் தமது வர்க்கத்தின் சக்தியினை உணர்ந்து விழிப்புற்றிருக்கிறது. தமது இரத்தத்திலும் வியர்வையிலும் வளர்ச்சியுற்று தமக்கு வளமான வாழ்வினைத் தரமுடியாதிருக்கும் இந்த ஈவிரக்கமற்ற சமுதாயத்தை தகர்த்தெறிந்து தனது வர்க்கத்தினை ஆட்சிபீடம் ஏற்றத் தலைப்பட்டுவிட்டது.

இவ்விதமாய் உணர்வின் அடிப்படையிலே திரட்சியடைகின்ற பாட்டாளி வர்க்கமானது புரட்சியின் படிகளிலே அடி வைக்க அடி வைக்க முதலாளித்துவமானது முகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுக்க முடியாத நிலையில் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டு வரு கிறது. பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகளை அடக்கி ஒடுக்குவத ற்காக மூர்க்கத்தனமான எதிர்ப்புரட்சித் தயாரிப்புகளில் அவ சர அவசரமாக ஈடுபட்டு வருகிறது. இவ்வாறாக இணக்கம் கா ணமுடியாத இந்த வர்க்கங்களின் திரண்ட வளர்ச்சிப் போக்கில் புரட்சிகள் வெடிக்கின்றன. இந்த வர்க்கங்களுக்கிடையிலான முரண்பாடுகளின் தன்மையினையும், இறுதி விளைவுகளையும் கார்ல் மார்க்ஸ் பின்வருமாறு எடுத்துரைக்கின்றார்... "ஒடுக்குவோரும் ஒடுக்கப்படுவோரும் ஒருவர்க்கொருவர் தீராய்ப் பகை கொண் டோராய் ஒரு நேரம் மறைவாகவும் ஒரு நேரம் பகிரங்கமா கவும் இடையறாப் போராட்டம் நடத்தி வந்தனர். இந்தப் போராட்டம் சமுதாயம் முழுவதன் புத்தமைப்பிலோ அல்லது போராடும் வர்க்கங்களது பொது அழிவிலேதான் எப்போதும் முடிவுறலாயிற்று".. சமுதாயம் முழுவதினதும் புத்தமைப்பிற்காக முதலாளி வர்க்கத்தை எதிர்த்து பாட்டாளி வர்க்கம் நடத்தும் புரட்சி முன்னெடுப்புக்கள் கூர்மைப்பட்டு வரும் இந்த நவீன சகாப்தத்தில் இலங்கை நாட்டின் வர்க்க நிலைப்பாடுகளையும் அந்த நாட்டின் தேசிய இனங்களில் ஒன்றான தமிழ்த் தேசியஇனத் தின் ஈழப் போராட்டத்தின் தன்மையினையும் அணுகுவது அவசிய மாகிறது.

பிரித்தானிய ஏகாதிபத்தியம் இல ங்கைக்கு சுதந்திரம் வழங்கிய காலத்தில் தனது வெளியேற்றத்தி ன் பின்னரும் இலங்கை அரசமைப்பானது முதலாளித்துவ வடிவமை ப்பையே பெற்றிருக்க வேண்டுமென விரும்பியது. இரு தேசிய இனங்களும் ஒன்றோடொன்று இணக்கமுள்ளவையாக இருக்கும் வகை யில் ஆட்சியமைப்பில் வசதி செய்யப்பட்டிருப்பின் சமுதாயங்களின் வரலாற்று நிகழ்வுப் போக்கிற்கு அமைய இலங்கையிலும் வர்க்க முரண்பாடுகளே தோற்றமெடுத்திருக்கும். இந்த முரண்பாடுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்க்கப் போராட்டத்தின் தோற்றுவாய்களை ஏற்படுத்தியிருக்கும்— இத்தகைய தோற்றுவாய்கள் இனவாதம் வளர்வதற்கான அடிப்படைக் கூறுகளை அழித்தொழித்திருக்கும்— வர்க்கப் போராட்டத்தின் இறுதி முடிவுகள் சோசலிச அரசமைப்பினை ஏற்படுத்திவிடும் . இதை விரும்பாத பிரித்தானியா ஏகாதிபத்தியம் தனது பிரித்தாளும் தந்திரத்தின் மூலம் முதாலாளித்துவம் நிலைத்து வாழக்கூடிய அரசமைப்பினை உருவாக்கி ஒப்படைத்துச் சென்றது .

பிரித்தானியாவின் வெளியேற்றமும் ,ஏகாதிபத்தியத்தின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்ட தோட்டத்தொழிலாளர்களின் தொடர்ச்சியான வெளியேற்றமும் இலங்கைத் தோட்டக் தொழிற் துறையில் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தி வந்தது . படிப்படியாக ஏற்பட்டு வந்த இலங்கையின் பொருளாதாரச் சரிவுகள் ஒட்டுமொத்த தொழிலாள ,விவசாய மக்கள் மீது சுமைகளை அடுக்கி வந்தது— சுமையின் வலி தாங்கமுடியாத கட்டத்தில் இந்ததொழிலாள , விவசாய மக்கள் அரசுக் கெதிரான போர் தொடுக்கும் நெருக்கடியான சூழ்நிலைகள் உருவொகின . இந்தக் காலகட்டத்தில்தான் இலங்கை முதலாளித்துவத் தளத்தில் இருந்து தேசிய இனவாதக் கூறுகள் செயற்படத் தொடங்கின . . . . . தேசிய இனங்களை கூறு போடத் தொடங்கின . . . . . . தென்னிலங்கை பாட்டாளி வர்க்கத்தின் மத்தியில் தமிழ் இன விரோத கருத்துக்கள் விதைக்கப்பட்டன . . . . . இதன் காரணமாக தென்னிலங்கைத் தொழிலாள , விவசாய மக்கள் தமது வர்க்க நிலைப்பாட்டை உணரமுடியாதவர்களாகினர்— இவர்களது சக்தி தமிழின விரோத சக்தியாக உருவெடுத்தது . சிங்களப் பெரும்பான்மை இனம் தம்மை அழித்தொழிக்க தயாராகிவிட்டது என்ற எண்ணப்பாடு தமிழ் மக்கள் மத்தியில் இயற்கையாகவே வேரூன்றத் தொடங்கியது . இலங்கைப் பாட்டாளி வர்க்கத்தின் ஒட்டுமொத்த சக்தியினை சித

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றடிக்க தேசிய முதலாளித்துவ வாதிகள் ஒன்றுபட்டு செயல்புரிந்தனர் . முதலாளித்துவத்தின் ஒன்றுபட்ட செயற்பாடு ஒட்டு மொத்த வர்க்கப் போராட்டம் முளை விடுவதற்கான சந்தர்ப்பங்களை அறவே அகற்றியது ,

இவை ஒருபுறம் இருக்க தமிழ்த் தேசிய இனத்தை அரசியல் ரீதியில் வழிநடத்திச் சென்றவர்கள் முழுக்க முழுக்க பிரபுத்துவ தன்மை கொண்ட முதலாளித்துவ சிந்தனையாளர்களாகவே இருந்துவந்தனர் இவர்களால் தமிழ்த் தேசிய இனத்தின் தொழிலாள ,விவசாய மக்களின் சக்திகளை முன்னணிக்கு கொண்டுவரவோ , வர்க்க ரீதியில் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லவோ , தகமையற்றவர்களாக கையாலாகாதவர்களாக காலத்தை ஓட்டினர் . முதலாளித்துவ பிரபுத்துவ வர்க்க சிந்தனை கொண்டவர்களால் ஓர் இனத்தின் தனி அரசியல் விடுதலையைக் கூட பெற்றுத்தர முடியாது என்பதை இந்த தமிழ்த் தேசிய இனத்தின் பூர்ஸ்வா வர்க்கத்தினர் நிரூபணம் செய்தனர் .

தவிர்க்கமுடியாதபடி தென்னிலங்கையில் தொழிலாளவர்க்கப் போராட்டங்கள் வெடித்த போதெல்லாம் அவையெல்லாம் சிங்களவர்களின் போராட்டங்கள் என்று இனவிரோத கருத்துக்களை முன் வைத்து , தமிழ்த் தொழிலாள வர்க்கம் இந்தப் போராட்டங்களில் இணைவதன்மூலம் ஒட்டு மொத்த தொழிலாள வர்க்கத்தின் கரங்கள் இணைந்துகொள்ளும் அரிய வாய்ப்புக்களை உடைத்து முதலாளித்துவத்தின் செயற்பாடுகளில் இவர்களும் பங்காளிகளாயினர் .

வட கிழக்கு மாகாணங்களிலும் , மலையகத்திலும் , தென்னிலங்கையிலுமாக தனிமைப்படுத்தப்பட்ட நிலையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ள இந்த சக்தி மிக்க பாட்டாளி வர்க்கங்கள் முதலாளித்துவத்தின் தந்திரங்களால் வரம்பிடப்பட்டுள்ளன. ஒட்டுமொத்த முதலாளித்துவ வர்க்கத்தின் ஒன்றிணைந்த சக்தியினால் இலங்கையின் பாட்டாளி வர்க்கம் ஒரு சக்தியாக உருவெடுக்கும் வாய்ப்புக்கள் இல்லாத நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது. ஆயிரம் ஆயிரம் அணுவாயுத சக்திகளுக்கும் ஒப்புவமை சொல்ல முடியாத சக்தி மிக்க வர்க்கங்கள் மூலைக்கு மூலை ஒதுக்கி வைக்கப்பட்ட நிலையில் ஈழப் போராட்டம் தொடக்கப்பட்டிருக்கிறது.

தமிழ்த் தேசிய இனத்தின் மீதான முதலாளித்துவ அரசின் அடக்குமுறைகள் உச்சக்கட்டத்தினை எய்தியதன் விளைவாக இந்த அடக்குமுறைகளை எதிர்க்கவேண்டுமென்று முறைப்பட்ட தீவிரவாதி இளைஞர்களின் இராணுவ நடவடிக்கைகள் காலப் போக்கில் விடுதலை இயக்கங்களாக பரிணமித்தன. ஈழப் புரட்சி முன்னெடுப்புகளில் இந்த தமிழீழ விடுதலை இயக்கங்களின் அணுகுமுறைகள் பற்றிய ஆய்வுக்கு செல்லாமல் .....

புரட்சியினை முழுமையாக நடத்தி முடிக்கவல்ல தமிழ்ப் பேசும் தொழிலாள விவசாய மக்களை ஒன்றிணைக்கவேண்டுமென்பதையும், ஈழப் போராட்டம் வர்க்கப் போராட்ட வடிவத்தை வந்தடைய வேண்டும் என்பதையும், பாட்டாளி வர்க்கத்தை இனம் கண்டு அவர்களுக்கு அறிவொளி ஊட்டப்பட வேண்டுமென்பதையும், முதலாளித்துவ வர்க்கத்தின் இரும்புப் பிடியில் இருந்து இந்த வர்க்கத்தினை மீட்டெடுத்து முதலாளித்துவத்தினை தகர்த்து நொறுக்கக் கூடிய இந்தச் சக்திகளைக் கூர்மைப்படுத்துவதன்மூலமே புரட்சி என்பது முழுநிறைவு பெறமுடியும் என்ற வரலாற்று உண்மைகளை முன்வைக்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோவியத் யூனியன்

## சோவியத் மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்கிறது.

சோவியத் மக்களின் வாழ்க்கைத் தரம் தொடர்ச்சியாக உயர்ந்துவருவதை சமீபத்திய புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன. அதுபோல சோவியத் யூனியனின் தேசிய உற்பத்தியிலும் இவ்வருடத்தின் அரையாண்டு காலப் பகுதியில் 4% வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. மக்களின் வாழ்க்கை வசதிகள் அதிகரித்து வரும் அதே வேளையில் அத்தியாவசிய பாவனைப் பொருட்களின் விலைகள் தொடர்ந்து பல வருடங்களாக ஒரே அளவுடையதாகவே இருக்கின்றன. இதே சந்தர்ப்பத்தில் முதலாளித்துவ நாடுகள் பலவற்றில் மக்களின் வாழ்க்கைத் தரம், மொத்தத் தேசிய உற்பத்தி ஆகியன தொடர்ந்து வீழ்ச்சியடைந்து செல்வது தெரிந்ததே.

## பாகிஸ்தானுடனான பேச்சுவார்த்தைகளை சோவியத் யூனியன் ஒத்திவைத்தது.

பாகிஸ்தானுடன் சோவியத் யூனியன் மேற்கொள்ளவிருந்த பேச்சுவார்த்தைகள் சோவியத் யூனியனின் கோரிக்கையின் பேரில் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. இதுபோலவே சமீபத்தில் பாகிஸ்தானுடன் இந்தியா மேற்கொள்ளவிருந்த பேச்சுவார்த்தைகளும் இந்தியாவின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்பட்டன. அதே வேளையில் சோவியத் பத்திரிகையான பிராவ்தா பாகிஸ்தானின் இராணுவ அரசாங்கத்துக்கும் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கும் ஏற்பட்டுள்ள தொடர்புகளை வன்மையாகக் கண்டித்துள்ளது. அணுக் கதிர்மையான ஆயுதக் கொள்வனவுகளை மேற்கொண்டு உபகண்டத்தில் பதட்ட நிலையை பாகிஸ்தானின் இராணுவ ஆட்சியாளர்கள் ஏற்படுத்த முயல்கிறார்கள் என்றும் பிராவ்தா சாடியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கிலாந்து

## தட்சரின் அரசுக்கு பெருத்த நெருக்குவாரம்.

உக்கிரமடைந்திருக்கும் தொழிலாளர் போராட்டங்கள் மார்க்கிரட் தட்சரின் அரசாங்கத்துக்கு பெருத்த நெருக்குவாரத்தை ஏற்படுத்தியுள்ளன. நான்காவது மாதமாகத் தொடரும் சுரங்கத் தொழிலாளர்களின் போராட்டத்தால் நாட்டின் இதர கைத்தொழில்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் வாரந்தோறும் 40 மில்லியன் டொலர்கள் நட்டத்தை அரசுக்கு ஏற்படுத்தி வருகிறது. இது மாத்திரமன்றி மேற்படி தொழிலாளர்களின் போராட்டத்துக்கு ஆதரவாக துறைமுகத் தொழிலாளர்கள், வைத்தியசாலை ஊழியர்கள் போன்ற பலரும் வேலைநிறுத்தங்களை ஆரம்பித்துள்ளனர். நெருக்குவாரங்களிலிருந்து தப்புவதற்காக தட்சரின் அரசாங்கம் தொழிற்சங்க உரிமைகளைத் தடைசெய்யும் சட்டத்தினை பிரயோகித்தது. ஆனால் இச்சட்டமூலம் முறையற்றது என பிரித்தானிய நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. அதே வேளையில் தட்சரின் கொன்சர்வேட்டிவ் கட்சியைச் சேர்ந்த பின்வரிசை உறுப்பினர்கள் பலரும் தட்சரின் சர்வாதிகாரச் செயற்பாடுகளை எதிர்க்க ஆரம்பித்துள்ளனர்.

போலந்து

## போலந்தில் அரசியல் கைதிகளுக்கு மன்னிப்பு.

கம்யூனிஸ்ட் ஆட்சியின் 40வது ஆண்டு நிறைவைக் குறித்து போலந்து அரசாங்கத்தின் மன்னிப்புத் திட்டத்தின் கீழ் 652 அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் தடை செய்யப்பட்ட 'சொலிடாரிற்றி' தொழிற்சங்கத்தை சேர்ந்தவர்களாகும். மேற்படி விடுதலை செய்யப்பட்ட கைதிகளை மீண்டும் அரச விரோத நடவடிக்கைகளில் ஈடுபடாதிருக்க வேண்டும் என்றும் மீறி மீண்டும் குற்றமிழைப்பார்களாயின் அவர்களது மன்னிப்பு ரத்துச் செய்யப்படும் என்றும் போலந்தின் அதிபர் ஜெருசெல்ஸ்கி எச்சரித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாலஸ்தீனம்

### பாலஸ்தீன விடுதலை இயக்கப் பிரிவுகளிடையே இணக்கம்..



ARAFAT

பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் பிரதான அரசியல், இராணுவப் பிரிவுகள் இயக்கத்துக்கு கூட்டுத் தலைமை அவசியம் என்றும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளனர். அதுபோல பாலஸ்தீனிய தேசிய மன்றத்தை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 15ம் திகதிக்கு முன்னர் கூட்ட வேண்டும் என்பதிலும் மேற்படி பிரிவுகளின் தலைவர்கள் இணக்கத்துக்கு வந்துள்ளனர். இந்த இணக்கம் அரபாத்தின் தலைமையிலான ஃபாதா, பலஸ்தீனிய விடுதலைக்கான மக்கள் முன்னணி, பலஸ்தீனிய விடுதலைக்கான ஜனநாயக முன்னணி, பாலஸ்தீனிய விடுதலை முன்னணி, பாலஸ்தீனிய கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவற்றுக்கிடையே ஏற்பட்டுள்ளது. பாலஸ்தீனிய மக்களின் விடுதலை வென்றெடுக்கப்படுவதற்கு மேற்படி இயக்கங்களிடையே ஏற்பட்டுள்ள ஐக்கியம் ஒரு புரட்சிகரமான புதிய திசைக்கு போராட்டத்தை இட்டு வந்துள்ளது என இன்னுமொரு தலைவர் அபு ஜிஹாட் கூறியுள்ளார்.

## நிக்கிராகுவா

நிக்கரகுவாவின் சான்டினிஸ்டாப் புரட்சியை நினைவு கூரும் பத்தாவது ஆண்டுக் கொண்டாட்டங்களில் இலட்சக்கணக்கான மக்கள் உணர்ச்சி பொங்கக் கலந்து கொண்டதுடன் தமது சுதந்திர தேசத்துக்கெதிரான அமெரிக்க ஆக்கிரமிப்பை முறியடிப்போம் என்றும் உறுதி பூண்டனர். அதே வேளையில் எதிர்வரும் நவம்பர் மாதத்தில் நிக்கரகுவாவில் நடக்கவிருக்கும் தேர்தலில் சான்டினிஸ்டிய புரட்சிகர நிறைவேற்றுக் குழுவில் ஜனாதிபதிப் பதவிக்கான வேட்பாளராக மேற்படி புரட்சிகர நிறைவேற்றுக் குழுவின் தொடர்பாளர் டானியல் ஒட்டேகா நியமிக்கப்பட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியா

## "உலகின் பெரும் சக்திகளின் தாக்கு-தலுக்கும் நான் இலக்காகி இருக்கிறேன்"
-இந்திரா-


GANDHI

"நாட்டிலுள்ள எதிர்க்கட்சிகளின் தாக்குதலுக்கு மட்டும் நான் இலக்காகவில்லை. உலகிலுள்ள மிகுந்த சக்தி படைத்த சில சக்திகளினதும் தாக்குதலுக்கு உள்ளாகி உள்ளேன்." இவ்வாறு இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி இந்தியப் பாராளுமன்றத்தின் மேல்சபையில் ஆற்றிய உரையில் தெரிவித்துள்ளார்.

## இந்திய அமைச்சரவையில் மாற்றங்கள்.

இந்தியாவின் அமைச்சரவையில் பல திடீர் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த மாற்றத்தின் கீழ் இந்தியப்பிரதமர் திருமதி இந்திரா காந்தி வெளிவிவகார அமைச்சை தற்காலிகமாகப் பொறுப்பேற்றுள்ளார். வெளிவிவகார அமைச்சராக இருந்து வந்த திரு. நரசிம்மராவ் உள்துறை அமைச்சராகவும் உள்துறை அமைச்சராக இருந்த திரு. சேத்தி அமைச்சு பொறுப்பற்ற அமைச்சராகவும் தொடர்ந்து அமைச்சரவையில் இருப்பார்கள் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

## இலங்கை ஜனாதிபதியுடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் உற்சாகமளிப்பதாக இல்லை - இந்திரா.

இலங்கை ஜனாதிபதி திரு. ஜெயவர்த்தனவுக்கும் தனக்குமிடையில் இலங்கை தமிழர் பிரச்சினை தொடர்பாக நடந்த பேச்சுவார்த்தைகள் "அவ்வளவு உற்சாக மூட்டுவதாக இல்லை" என்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி கூறியுள்ளார். பத்திரிகைப் பேட்டியொன்றின் போது இதைக் கூறிய இவர் தமிழர் பிரச்சினை தொடர்பாக இலங்கை அரசாங்கம் நாட்டின் எதிர்கால கட்டுக்கோப்பு [illegible] பரந்த அளவில் நோக்கி செயல்பட வேண்டியுள்ளது என்றும் கூறியுள்ளார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரான்சில் ஒரு அரசியல் சதுரங்கம்



Laurent Fabius

முதலாளித்துவ ஆட்சிப் பொறி அமைப்புக்களில் ஏற்படுகின்ற அரசியல், பொருளாதார சீர்கேடுகளால் மக்கள் அதிருப்தி அடைகின்ற வேளைகளில் அவர்களின் கவனத்தை திசை திருப்பும் வகையில் அரசியல் சதுரங்க விளையாட்டுக்கள் நடப்பது வழக்கம். அத்தகைய ஒரு அரசியல் சதுரங்கமே பிரான்சில் அரங்கேறியது.

1981 ம் ஆண்டு பதவிக்கு வந்த சோசலிச-கம்யூனிஸ்ட் கட்சியின் கூட்டரசாங்கம் பிரான்சின் மத்திய தர, தொழிலாள வர்க்கங்களிடையே ஏராளமான கனவுகளைப் பூக்கச் செய்தது. அரசியல் வரலாற்றில் முதல் தடவையாக 4 கம்யூனிஸ்ட் அமைச்சர்கள் அமைச்சரவைக்கு வந்தது தொழிலாள வர்க்கத்துக்கு திருப்தியைக் கொடுத்தது. அது மாத்திரமல்ல மேற்படி அரசின் ஆரம்ப நடவடிக்கைகளான 5 பெரும் கைத்தொழில் நிறுவனங்களையும், 39 வங்கிகளையும் தேசியமயப்படுத்திய செயல், தொழிலாளர்களுக்கு 10% ஊதிய அதிகரிப்பு வழங்கியமை எல்லாமே அரசின் நடவடிக்கைகளுக்கு சோசலிச சாயத்தை பூசியது. இது கண்டு விழித்துக்கொண்ட முதலாளித்துவம் நெருக்குவாரத்தைத் தொடங்கியது. விளைவு பிரான்சின் பொருளாதாரம் நெருக்குவாரத்தையடைந்தது. 1983 இன் ஆரம்ப பகுதியில் பணவீக்கம் 12% மாகவும், நாட்டின் வர்த்தகக் கடன் 90 மில்லியன் பிராங்குகளாகவும் விசுவரூபம் எடுத்தது. பிரெஞ்சு நாணயம் மூன்றாவது பெறுமதிக் குறைப்புக்கு உள்ளானது. இந்நிலையில் தனது வீழ்ச்சியைத் தவிர்க்க அரசு தனது கொள்கையை மாற்றியது. அதிக வேலை வாய்ப்புக்களை உருவாக்கல் என்பதை முக்கிய நோக்காகக் கொண்டிருந்த அரசு 1983 மார்ச்சில் பணவீக்கத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைப்பதே தனது முக்கிய நோக்கு என அறிவித்தது. இதையடுத்து அப்போதைய நிதியமைச்சர் பல கடுமையான முறைகளை அறிவித்தார். அரசாங்கச் செலவினங்கள் குறைக்கப்பட்டன, நட்டத்தில் இயங்கிய பல தொழில் நிறுவனங்கள் மூடப்பட்டன. தொழிலாளர்களது ஊதிய உயர்வுகள் தடுக்கப்பட்டன. சமூக நலச் செலவீடுகளில் பெரும் வெட்டு. விளைவு 1984 இல் வர்த்தகக் கடன் 22 பில்லியன் பிராங்குகளாக வீழ்ச்சியடைந்தது. 12% மாக இருந்த பணவீக்கம் 7.7% மாகியது. அதே வேளையில் 7.2% மாக இருந்த வேலையற்றோர் தொகை 10% மாகியது. ஏறத்தாழ 2.3 மில்லியன் தொழிலாளர்கள் வேலையற்றவர்களானார்கள்.

விளைவு இடைத்தேர்தல்கள், உள்ளூராட்சித் தேர்தல்கள், ஐரோப்பிய பாராளுமன்றத் தேர்தல் அனைத்திலும் அரசுக்கு ஆதரவு குறைந்தது. அதிலும் கம்யூனிஸ்டுகளே மிகப் பெரிய இழப்பாளிகள் ஆகினர். ஜனாதிபதிக்கான ஆதரவு அபிப்பிராய வாக்கெடுப்பில் மிகக் குறைந்த கட்டத்தை அடைந்தது. எந்தவித கொள்கையுமற்ற வலதுசாரி தீவிர அணி ஆதரவைக் கைப்பற்றத் தொடங்கியது. அரசின் அடுத்த தேர்தல் தோல்வி உறுதியாகியது.

இந்தக் கட்டத்தில் தனது அரசியல் திறமை அனைத்தையும் பாவித்து ஜனாதிபதி மித்திரான் மேற்கொண்ட அசைவே பிரான்சின் சமீபத்திய மந்திரிசபை மாற்றம். இதை வெறும் அமைச்சரவை மாற்றமாக கருதமுடியாது. அரசாங்கம் தனது சோசலிசக் கொள்கைகளைக் கைவிட்டு மத்திய வலதுசாரிக் கொள்கைகளை நோக்கி அசைந்துள்ள ஒரு அரசியல் மாற்றமாகவே கொள்ளவேண்டும். தொழிலாளவர்க்கத்தைப் பிரதிபலித்த முன்னாள் பிரதமர் பியே மொறுவா மாற்றப்பட்டு அந்த இடம் புதிய பிரதமரும் பெரும் செல்வந்த வம்சத்தவருமான லோரன்ற் ஃபபியுஸ்க்கு கொடுத்ததே இதற்கு உதாரணம். திரு. ஃபபியுஸ் இந்த நூற்றாண்டின் இளம்வயதுப் பிரதமர். அதே வேளையில் அற்புதமான திறமைசாலி. பிரான்சின் கைத்தொழில்களை நவீனமயப்படுத்தி உலக உற்பத்தியரங்கில் மீண்டும் பிரான்சுக்கு முக்கிய இடம் கிடைக்க வேண்டும் என்பது இவரது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்கை. ஆனால் இந்த சோசலிசக் கட்சியின் அரசியல் கூட்டாளிகளான பிரெஞ்சுக் கம்யூனிஸ்டு கட்சி ஏற்றுக் கொள்ளவில்லை. தொழில்களை நவீன மயப்படுத்தும் போது ஏற்படப் போகும் பெருந்தொகையான வேலை இழப்புக்களால் பாதிக்கப்படப் போகும் ஆயிரக் கணக்கான தொழிலாளர்களின் மனஉணர்வுகளைப் புறக்கணித்து, அவர்களுக்கெதுவும் செய்வதற்கு அதிகாரமற்ற பதவிகளை நாங்கள் கட்டிக் கொண்டிருக்க விரும்பவில்லை என்று கூறி கூட்டிலிருந்து வெளியேறிவிட்டது கம்யூனிஸ்டுக்கட்சி. இறுக்கமான பொருளாதாரக் கட்டுப்பாட்டை விதித்த முன்னாள் நிதியமைச்சர் டெலோர்சும் அமைச்சிலிருந்து விடுவிக்கப்பட்டு ஐரோப்பிய பாராளுமன்றத்தின் தலைவராக நியமிக்கப்பட்டு விட்டார்.

இவற்றையடுத்து ஜனாதிபதி அறிவித்த - சர்ச்சைக்குரியதாகக் கருதப்பட்ட பாடசாலைகளை பொதுமைப்படுத்தும் சட்டமூலத்தை மீளப்பெற்றமை - வரிக் குறைப்புக்கள் ஆகியன அரசு சோசலிசக் கொள்கையிலிருந்து வேறுபட்டுச் செல்வதையே காட்டுகிறது. இந்தக் கட்டத்தில் சோசலிசக் கட்சிக்கான ஆதரவு அபிப்பிராய வாக்கெடுப்புக்களில் சடுதியாக அருகியுள்ளது. இந்த நிலையிலே வலதுசாரிக் கட்சிகள் செய்வதறியாது திகைத்து எப்படியாவது அரசைத் தோற்கடிக்க வேண்டும் என்ற நோக்கில் இனவாதம் பேசும் தீவிர வலதுசாரிக் கட்சியான தேசிய முன்னணியுடன் இணைந்துள்ளன. அதே வேளையில் கம்யூனிஸ்டுக் கட்சியின் ஆதரவான பிரான்சின் பெரிய தொழிற்சங்கமான சி.ஜி.ரி தொழிலாளர்களைப் பாதிக்கும் அரசின் செயல்திட்டங்களுக்கெதிராக போராட்ட நடவடிக்கைகளில் ஈடுபடத் தயாராக உள்ளது. இனவாதம் பேசும் தேசிய முன்னணி சமீபத்திய தேர்தல்களில் தனக்குக் கிட்டிய எதிர்பாராத ஆதரவைக் கண்டு வளர்ந்த இனவாதத் தீயை கொழுந்து விட்டெரியச் செய்ய தயாராக இருக்கின்றது. இந்நிலையில் பிரான்சில் வாழும் வெளிநாட்டு மக்கள் பெரும் இன்னல்களை சந்திக்கப் போவது தவிர்க்க முடியாததாகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா குடியகல்வுத் தடைய இலங்கை கட்ட முயல்கிறதா?

சென்ற இதழ் தொடர்ச்சி..........

நேரு, டீஎஸ்.சேனநாயக்காவுக்கு எழுதிய கடிதத்தில் "சுதந்திர இந்தியாவும், சுதந்திர இலங்கையும் குடியுரிமை தொடர்பான இந்தப் பிரச்சனையில் மட்டும் தொடர்ச்சியாகப் பிளவுபட்டிருப்பது என் மனதை பெரிதும் பாதிக்கின்றது" என்று குறிப்பிட்டார். இது தொடர்பாக நடந்த பல கடிதத் தொடர்புகளின்போது டி.எஸ்.சேனநாயக்கா புனித புத்தபகவான் சாட்சியாக சத்தியம் செய்தார். இந்தச் சத்தியமானது "தமக்கு இலங்கைப் பிரஜா உரிமையை தெரிவு செய்யாத அல்லது அனுமதிக்காத இந்தியப் பிரஜைகள் இந்தத் தீவில் தொடர்ச்சியாக இந்தியப் பிரஜைகளாக வாழ அனுமதிக்கப்படுவர் அவர்களுடைய அன்றாட வாழ்விலோ அன்றேல் சட்டரீதியிலான கடமைகளிலோ எந்த விதமான இடையூறும் இருக்கமாட்டாது" என்று உறுதி கூறியது, இந்தச் சத்தியம் என்னவானது? இதற்காக இந்தியா கோபப்படவில்லை. இதன் பின்னர்கூட 1951ம் ஆண்டு நேரு தனக்கும் மக்கள் சீன அரசுக்கும் இடையேயிருந்த நல்லுறவைப் பயன்படுத்தி குழந்தையாக இருந்த சுதந்திர இலங்கைக்கும் மக்கள் சீனக் குடியரசுக்கும் இடையே இறப்பர்–அரிசி பண்டமாற்று வியாபார நடவடிக்கைக்கு வழிவகுத்துக் கொடுத்தார்.

1953ல் இரண்டாம் எலிசபெத் மகாராணியின் முடிசூட்டு விழாவிற்காக லண்டனுக்கு விஜயம் செய்த இலங்கைப் பிரதமர் டட்லி சேனநாயக்காவும் இந்தியப் பிரதமர் ஜவகர்லால் நேருவும் இலங்கையிலுள்ள இந்தியப் பிரஜைகள் பிரச்சனை தொடர்பாக கலந்துரையாடினர். அக்கால கட்டத்தில் 8,25,000 பேர் பிரஜா உரிமைக்கு விண்ணப்பித்திருந்தனர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களில் 7 இலட்சம் பேரை இலங்கை ஏற்கவேண்டும் என்றும் மற்றவர்களை இந்தியா ஏற்குமென்றும் கேட்டபோது 4 இலட்சம் பேருக்கு பிரஜாவுரிமை வழங்குவதாக டட்லிசேனநாயக்கா ஒத்துக்கொண்டார். ஆனல் மேலும் 2,50,000 பேரை இலங்கை ஏற்கவேண்டும் என்ற வற்புறுத்தல் காரணத்தாலும் இதரசில காரணங்களினலும் அந்தப் பேச்சுவார்த்தை உடன்பாடு வரை வரமுடியாமல் போனது.

1953ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் சேர். ஜோன். கொத்தலாவலை இலங்கைப் பிரதமாராக வந்தார். 1954 ஜனவரியில் இலங்கைப் பிரதமர் இந்தியாவுக்கு விருந்தாளியாக அழைக்கப்பட்டு புதுடெல்லியில் பேச்சுவார்த்தை மேற்கொள்ளப்பட்டபோது ஒரு புதிய இணக்கம் வந்தது. எவரெவர் இலங்கைப் பிரஜையாக வர விரும்புகிறார்களோ அவர்களை இலங்கை ஏற்கவேண்டும் என்றும் எவரெவர் இந்தியப் பிரஜைகளாக வர விரும்புகிறார்களோ அவர்களை இந்தியா ஏற்க வேண்டும் என்றும் உடன்பாட்டுக்கு வரப்பட்டது. மிக நாகரீகமானதும் மனிதாபிமானமுடையதுமான இவ்வுடன்படிக்கையை இலங்கை அரசாங்கம் கௌரவிக்கத் தவறியது. இலங்கை அரசாங்கம் "இந்தியப் பிரஜைகள் ஒவ்வொரு நாளும் கள்ளத் தோணிகள் போல் வருகிறார்கள் ஆதலால் இவ்வுடன்படிக்கையை அமுல் நடத்த முடியாது' என பொய்க் காரணம் காட்டியது.

1954 ஒக்டோபரில் இலங்கை அரசாங்கத்தின் முயற்சியால் இப்பிரச்சினை தொடர்பாக புதுடெல்லியில் மீண்டும் பேச்சு வார்த்தை நடைபெற்றது. அந்தப் பேச்சுவார்த்தையின்போது இலங்கைத் தூதுக்குழுவில் இலங்கைப் பிரதமர் சேர். ஜோன். கொத்தலாவலையும் அன்றைய எதிர்க்கட்சித் தலைவர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடங்கியிருந்தனர். கூடிய விரைவில் இலங்கையில் பதிவுப் பட்டியல் ஒன்றைத் திறந்து இலங்கைப் பிரஜைகளாக வர விரும்புபவர்களைப் பதிவு செய்து விடுவது – அதற்குப் பிறகு வருபவர்களுக்கு இலங்கைப் பிரஜா உரிமை வழங்காது இதனோடு பிரஜா உரிமை பெற்ற இந்திய இலங்கையர்க் கென்று 4பாராளுமன்ற ஆசனங்களை ஒதுக்குதல் ஆகிய அம்சங்கள் முன் வைக்கப் பட்டன. இந்த ஒப்பந்தமானது இலங்கை அரசாங்கத்தினால் பதிவுப் பட்டியலில் பதிதல் சிரமமானது என்ற காரணத்தின் பேரில் உடைக்கப்பட்டதோடு இந்திய இலங்கையர்க்கென நான்கு பாராளுமன்ற ஆசனங்களும் ஒதுக்கப்படாது செய்யப்பட்டது.

1956ல் பண்டாரநாயக்கா பிரதமரானார். பண்டாரநாயக்கா பிரதமரானதும் ஜவகர்லால் நேரு உடனடியாக விசேட விமானத்தில் இலங்கைக்கு வந்தார். நேருவின் புத்திமதிகளின் பேரில் சோவியத் யூனியன், யூகோஸ்லாவியா, மக்கள் சீனம் போன்ற நாடுகளோடு புதிய இராஜரீக உறவுகள் ஏற்படுத்தப்பட்டு இலங்கையை தொழில் மயப்படுத்துவதலுக்கான ஒப்பந்தங்களும் கைச்சாத்திடப்பட்டன. உருக்குத் தொழிற்சாலை களனி இறப்பர் தொழிற்சாலை, துல்கிரிய நெசவுத் தொழிற்சாலை, பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை போன்ற பல தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டன. நேருவின் இந்தப் பங்கினை கௌவிரவிப்பதற்காக 1957 மே மாதம் கொழும்பில் நடைபெற்ற புத்த ஜயந்தி விழாவிற்கு நேரு பிரதம அதிதியாக அமைக்கப்பட்டார். அவர் வருகையின் போது பிரஜா உரிமைப் பிரச்சனை மீண்டும் கலந்துரையாடப்பட்டது.

"1957 செப்டம்பரில் பண்டாரநாயக்கா கீழ்க்கண்டவாறு பாராளுமன்றத்தில் குறிப்பிட்டார் "இலங்கையிலுள்ள இந்தியப் பிரஜைகளை நாடற்றவர்களாக்கச் செய்யும் எந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்குடனும் இலங்கை செயற்படாது, அதல் வர்த்தகம் மற்றும் இதர தொழில்கள் தொடர்பான இந்தியப் பிரஜைகளது இலங்கைப் பிரஜா உரிமைக்கான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டிருக்கின்றன......" பண்டாரநாயக்கா 1957ல் கொல்லப்படும் வரை தான் கொடுத்த வாக்கை சீரமிக்காவிட்டாலும் பிரஜைகளாகப் பதியும் வேலையானது மிகவும் மந்த கதியிலே நடைபெற்றதை துரிதப்படுத்த முடியாதவராகிவிட்டார்.

இதையடுத்து சிறிமாவோ பண்டாரநாயக்கா இரண்டு முறை பிரதமராக வந்தார். இதே வேளையில் இந்தியாவில் நேரு காலமாகி லால்பகதூர் சாஸ்திரி பிரதமர் அனார். 1964 அக்டோபரில் இலங்கைப் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா இந்தியப் பிரதமரை சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தினார். அப்பேச்சுவார்த்தையின் போது இலங்கையிலுள்ள மொத்த 9இலட்சத்து 75ஆயிரம் இந்திய வம்சா வழியினர்களுள் 3இலட்சம் பேருக்கு இலங்கைப் பிரஜா உரிமை வழங்கும் என்றும் 5இலட்சத்து 25ஆயிரம் பேருக்கு இந்தியா பிரஜா உரிமை வழங்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார். எஞ்சிய 1,50,000 பேரைப்பற்றி எதிர்காலத்தில் யோசிப்பது. அப்போது வேலை செய்தவர்கள் தொடர்ந்து தங்களது வேலைத்தளங்களில் 55வயது வரை வேலை செய்யலாம். அவர்கள் இந்தியாவிற்குத் திரும்பும் போது 4000ரூபாவுக்கு குறையாமல் சேமிப்பாகக் கொண்டு செல்ல இலங்கை அரசாங்கம் உறுதி அளிக்கும் என்ற அம்சங்களை இப் பேச்சுவார்த்தை உள்ளடக்கியது, நேருவைப் போன்று லால் பகதூர் சாஸ்த்திரி பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் வேண்டுமென்றோ, தோட்டங்கள் தவிர்ந்த மற்றைய வேலைத்தலங்களில் வேலை வாய்ப்பு வேண்டுமென்றோ கேட்கவில்லை.

1964அக்டோபர் 30ம் திகதி சிறிமாவோ பண்டாரநாயக்கா எழுதிய கடிதத்திற்கு லால்பகதூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாஸ்த்திரி பின்வருமாறு பதிலளித்தார் ".... எம்மிடையே மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தை கௌவுரவிக்கவேண்டியதும், கட்டுப்படவேண்டியதுமான கடமைப்பாடு எனக்கிருக்கிறது உங்களுடைய கடிதமும் அதற்கான எனது பதிலும் இந்திய அரசுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தின் சாட்சிகளாகவே இருக்கின்றன. என என்னுடைய உறுதிப்பாட்டினை மேன்மை தங்கிய உங்களுக்குத் தெரிவிக்கின்றேன்....."

எவ்வளவு இங்கிதமான முறையிலும் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையுடனும் இந்தியப் பிரதமர் செயற்பட்டார். லால்பகதூர் சாஸ்த்திரி காலமான பின்பு சிறிமாவோவின் ஆட்சியில் தோட்டத் தொழிலாளர்கள் பலாத்தகாரமாக வேலை இடைநிறுத்தம் செய்யப்படவில்லையா?. நாடு கடத்தப்பட்டவர்கள் ஒவ்வொருவரும் 4000ரூபாவுக்கு குறையாமலா கொண்டு சென்றார்கள்? அன்றி சிறிமாவோவின் அரசாங்கம் 3இலட்சம் மலையகத் தமிழர்களுக்குப் பிரஜாஉரிமை வழங்கியதா? இவற்றையெல்லாம் விட இந்திய அரசாங்கமானது எவ்வாறு தாழ்மையாக நடந்து கொள்வது?.

1965ம் ஆண்டு சிறிமா–சாஸ்திரி ஒப்பந்தம் காலாவதியாவதற்கு முன்னால் டட்லி சேனநாயக்கா பிரதமரானார். டட்லி சேனநாயக்கா ஏற்கனவே இரு நாடுகளினது பிரதமர்களால் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தைக் கௌவுரவியாமல் டட்லி–தொண்டமான் ஒப்பந்தத்தை 1967 ஏப்பிரலில் எழுதினார். இ.தொ.காவானது சிறிமா–சாஸ்திரி ஒப்பந்தத்தை இனத்தன்மையுமற்றது, நடைமுறைத் தன்மையுமற்றது என விமர்சித்திருந்தது. மாறாக 1967 செப்டம்பரில் இந்தியாவின் புதிய பிரதமரான திருமதி இந்திராகாந்தி இலங்கைக்கு விஜயம் செய்த போது இப்பிரச்சனையை மீண்டும் ஆய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வுக்கு எடுத்தபோது இந்திராகாந்தி "சிறிமா—சாஸ்திரி ஒப்பந்தத்தை பிரச்சினை இல்லாமலும் விரைவாகவும் நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான அனைத்தையும் செய்யவேண்டும். இதற்குத் தேவையான சகல ஒத்துழைப்பையும் இந்தியா தரும்" என்று கூறி இந்தியாவின் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையை மீண்டும் உறுதி செய்தார். அன்று அந்தக் கலந்துரையாடலிலே டட்லி சேனநாயக்கா புதிய பிரேரணைகளையோ, டட்லி—தொண்டமான் ஒப்பந்தம் பற்றியோ பேசவில்லை. ஆனால் 1968 மார்ச் மாதத்தில் தமிழரசு, தமிழ்க் காங்கிரசு கட்சிகளின் சம்மதத்தோடு அடையாள அட்டை மசோதாவை இலங்கை அரசாங்கம் கொண்டு வந்தது. அதிலே ஒவ்வொரு இலங்கைப் பிரஜையும் தாம் இலங்கையில் வதிவதற்குரிய சட்ட ஆவணங்களை நிரூபித்துக் காட்டவேண்டும் என அந்த மசோதா கோரியது. இந்த மசோதா இந்திய வம்சா வழியினருக்கு மேலும் தலையிடி கொடுப்பதாகவேயிருந்தது . ஆனால் இதைப் பற்றி இந்திய அரசாங்கம் எந்த விமர்சனத்தையும் செய்யவில்லை.

1968இன் கடைசிப் பகுதியில் டட்லி சேனநாயக்கா இந்தியாவுக்கு விஜயம் செய்தபோது "இந்திய வம்சா வழியினரை இந்தியாவுக்கு அனுப்புவதற்கு அவர்களின் உடமைகளை இந்தியாவுக்கு கொண்டுவருவதற்கான வெளிநாட்டுச் செலவாணியே தடையாக உள்ளது" என்று சாக்குப் போக்குச் சொல்லவே அதுபற்றிய பேச்சு வார்த்தைகளில் ஒவ்வொருவரும் 75,000ரூபா பெறுமதியான சொத்துக்களை வெளிநாட்டுச் செலவாணி வரி செலுத்தாது எடுத்துச் செல்லலாம் என்பது உடன்படிக்கை ஆகியது. இதிலே பரிதாபம் என்னவென்றால் ஒவ்வொரு இந்தியக் குடும்பங்களும் சில ஆயிரம் பெறுமதியான சொத்துக்களையே தமதாகக் கொண்டிருந்தனர் .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1973 ஏப்பிரலில் இந்திராகாந்தி இலங்கைக்கு விஜயம் செய்தபோது அப்போது பிரதமராக இருந்த சிறிமாவோ பண்டாரநாயக்கா சிறிமா–சாஸ்திரி ஒப்பந்தத்தில் ஒவ்வொரு வருடமும் 35,000பேரை இந்தியாவுக்கு அனுப்புவதற்கான உடன்படிக்கையை மேற்கொண்டார். ஐ.தே.க அரசின் பதவிக்காலத்தில் அதுசீராக நடைமுறைப்படுத்தப்படவில்லை . இதனை ஈடு செய்யும் முகமாக 45,000 பேரை வருடம் தோறும் அனுப்ப வேண்டும் என்று கேட்டபோது இந்திராகாந்தி எதிர்வாதத்தை பேசாமல் ஒப்புக் கொண்டார். இவ்வளவும் நடந்தது வங்காள தேச யுத்தத்தில் இந்தியாவை இலங்கை அரசாங்கம் தொடர்ந்து கண்டித்த பின்பும், பாகிஸ்த்தான் யுத்த விமானங்களை கட்டுநாயக்காவில் எண்ணெய் நிரப்பிச் செல்ல அனுமதித்த பின்புமாகும் .

1974 ஜனவரியில் இலங்கைப் பிரதமர் இந்தியாவுக்கு விஜயம் செய்த போது நிர்ணயம் எடுக்காது எஞ்சியிருந்த 1,50,000 பேரில் 75,000பேரை இலங்கை ஏற்கிறது மீதி 75,000 பேரை இந்தியா ஏற்க வேண்டும் எனக் கேட்டபோது இந்திராகாந்தி ஒப்புக்கொண்டார்.

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையிலுள்ள கசப்பான முரண்பாடுதான் இந்திய வம்சா வழியினரின் பிரச்சினை. அடுத்தது கச்சதீவுப் பிரச்சினை. இந்தத்தீவானது வரலாற்று ரீதியாகவே இராமநாதபுரம் இராஜாவின் அதிகாரத்தின் கீழேயே இருந்தது . இந்தத் தீவானது இலங்கைக்குச் சொந்தமானதென்று நிறுவுவதற்கு எந்த ஆதாரமும் கிடையாது. அரைச் சதுர மைல் விஸ்தீரணமுடைய இந்தத் தீவானது அங்குள்ள பரிசுத்த அந்தோனியார்கோவிலுக்குச் சொந்தமானதென்று கூறிக் கொள்வது மீனவர் சம்பிரதாயமாகும். 1956ம் ஆண்டு அந்தக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீவினை இலங்கைக்குத் தரவேண்டும் என்று இலங்கை அரசாங்கம் கோரியது. அதற்குப் பின் ஒவ்வொரு வருடமும் புனித அந்தோனியார் கோவில் திருவிழாவின்போது இத் தீவு இலங்கைக்குச் சொந்தமா அல்லது இந்தியாவுக்குச் சொந்தமா என்ற சர்ச்சை எழுந்து வழக்கம்.

மன்னார், பேசாலை, போன்ற இடங்களிலாறு செல்லும் எண்ணெய் நரம்புகள் செயற்கை கோளில் இருந்து எடுத்த புகைப்பட ஆராய்ச்சியிலிருந்து கச்சதீவுக்கூடாகவும் செல்வது வெளியானது. அந்த அறிவித்தலைத் தொடர்ந்து இந்தியா தனது கடற்கரையிலிருந்து 12மைல் தூரமுள்ள கடல் கற் சொத்துக்கள், அகழ்வாராய்ச்சி உரிமைகள் அனைத்தும் இந்தியாவுக்கே சொந்தமானது என பிரகடனப்படுத்தியது. இந்தியக் கடற்கரையில் இருந்து 12 மைலுக்குள் உள்ள கச்சதீவானது இந்தியாவுக்குச் சொந்தமானது. 1970ம் ஆண்டில் இலங்கை அரசாங்கம் இலங்கைக் கடற்கரையில் இருந்து 12 மைல் தூரம் இலங்கையின் இறைமைக்குட்பட்டதென்று பிரகடனப்படுத்தியது. அப்போது கச்சதீவு இலங்கை எல்லைக்குள் அடங்கியது . ஆனால் வரலாற்று ரீதியாகக் கச்சதீவை இலங்கையின் எந்த மன்னர்களோ அன்றி ஆட்சியாளர்களோ உள்ளடக்கி ஆண்டது கிடையாது. 1974ம் ஆண்டு சிறிமாவோ பண்டாரநாயக்கா இந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கும்படி இந்திராகாந்தியின் அரசைக் கேட்டபோது இந்திய அரசு மிகவும் பெருந்தன்மையுடன் அதை இலங்கைக்கு கொடுத்தது. இந்தச் செயலின் முன்னால் இந்தியத் தேச விஸ்தரிப்பு என்ற புலம்பியவர்கள் வாய் மூடினார்கள்.

இந்திய அரசாங்கங்கள் விட்டுக் கொடுக்க விட்டுக் கொடுக்க இலங்கை அரசுகளின் குனியக் குனியக் குட்டும் செயல்களே நடந்து இருக்கின்றன. இதற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயிரம் உதாரணங்களைக் காட்டமுடியும் . அதுவும் இந்திய வம்சாவழித் தமிழ் மக்களின் பிரச்சினை— இலங்கைப் பாராளுமன்ற விவாத நேரத்தில் அரைவாசி நேரத்துக்கு மேல் விழுங்கிய இப்பிரச்சினையை முடிவுக்கு கொண்டுவர இந்திய அரசாங்கம் தன்னாலான அத்தனை முயற்சிகளையும் ......பெரிய தியாகங்களையும் கூடச் செய்து விட்டது. ஆனால் இலங்கை அரசாங்கமோ இன்று இன ஒடுக்குமுறை என்ற புதிய தந்திரோபாயத்தில் இந்திய வம்சாவழித் தமிழர்களை மாத்திரமல்ல முழு இலங்கைத் தமிழர்களையும் அகதிகளாக்கி இந்தியாவுக்கு அனுப்பி அனுப்பி இந்தியாவின் பொறுமையைச் சோதிக்கிறது

ஆனால் இன்று இந்திய அரசாங்கத்திற்கு இலங்கை அரசாங்கத்தின் தொடர்ந்த ஆத்திரமூட்டல்களில் இருந்து மீள்வதற்கும் , இலங்கை அரசாங்கம் இந்திய அரசாங்கத்திற்கு கொடுக்கும் சுமைகளிலிருந்து விடுபடுவதற்கும் ஒரேயொரு வழிதான் உண்டு. தமிழீழ மக்களின் சுய நிர்ணய உரிமையை ஏற்று தமிழீழத்தின் பிறப்பிற்குத் துணை நின்று தமிழீழத்தினை அங்கீகரித்தலைத் தவிர இந்திய அரசிற்கு செய்வதற்கு மாற்று வழி வேறொன்றும் இல்லையாகும்.

தோழர்களே!

அரசியல் அறிவை, அரசியல் நெறிப்படுத்தல் - இவை இல்லாமல் ஒரு விடுதலை இயக்கத்தைக் கட்டியெழுப்ப முடியாது. இதற்கு சக்தி வாய்ந்த விடுதலைப் பத்திரிகைகள் தேவை. இதற்கு 'தமிழ் முரசை' வளர்த்தெடுங்கள். தொடர்புக்கு...

The Editor,
"TAMIL MURASU"
TAMIL EELAM LIBERATION COUNCIL, (France)
10 rue des Martyrs, 75009 PARIS.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# -= மனிதருக்குரிய பாடல் =-

துயரங்களின் தோழர்களே
துணையுண்ட நண்பர்களே
வாருங்கள்
ஒன்றொன்றும் தோல்வியுற
அணி வகுத்துச் செல்வோம்
நாம் எதையும் இழக்கோம்
நமது சவப்பெட்டிகளைத் தவிர.

விண்ணைக் நோக்கி நாம் பாடல் இசைக்கலாம்
நம்பிக்கைகளை நாங்கள் அனுப்பலாம்
தொழிற்சாலைகளிலும்
கல்லுடைக்கும் இடங்களிலும்
வயல் வெளிகளிலும் நாங்கள் பாடலாம்
மறைவிடங்களை விட்டும் நீங்கலாம்
சூரியனைப் பார்க்கலாம்.

அவர்கள் தமிழர்கள், காட்டு மிராண்டிகள்
நமது எதிரிகள் முறை முறைப் பார்கள்
ஆம்! நாங்கள் தமிழர்கள்
நாங்கள் அறிவோம்.

தொழிற்சாலைகளும் வீடுகளும்
ஆஸ்பத்திரிகளும் பாடசாலைகளும்
எப்படிக் கட்டுவது என்பதை அறிவோம்
குண்டுகளும் ரவை கணைகளும்
எப்படிச் செய்வது என்பதை அறிவோம்
இசையும் அழகிய கவிதையும் கூட
நாங்கள் இயற்றுவோம்.

"பாலஸ்தீனக் கவிதை" சிறு மாற்றங்களுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Libyan women training for the Peoples miltia

ஏகாதிபத்தியத்தின் எதிர்ப்புரட்சிச்சதி-களை முறியடித்து தமது நாடுகளின் மக்கள் அரசுகளின் புரட்சிக் கொடிகளை உயரப் பிடிக்கும் லிபியா, நிக்கரகுவா, கியூபா பெண்களின் வரிசையில்....

ஈழப் பெண்களும் இணைந்திட வேண்டும். ஈழப் போராட்டத்தில் ஆணுக்குப் பெண் சரிநிகர் பங்கெடுத்து அணி திரள வேண்டும்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

# ஏகாதிபத்தியச் சதிகளை முறியடிக்க ஈழப்பெண்களே அணி திரளுங்கள்

வெளியீடு: தமிழீழ விடுதலைப் பேரவை | பிரான்சு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# TAMOUL

TAMIL EELAM EST INEVITABLE

# MURASU

MURASU-2 OLY-10

AOUT-1984

* 36 HABITATIONS TAMOULES DEMOLIES PAR LES FORCES

* TAMOULS DE COLOMBO SOUS LA FOUILLE CONSTANTE

* ARRESTATION ARBITRAIRE A BATTICOLOA

* CENSURE AUSSI SUR LES AGENTS DE PRESSE ETRANGERE

* HARTAL - POUR LA MEMOIRE DU POGROM DE JUILLET 1983

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# EDITORIAL




*LA LUTTE DE LIBERATION DES TAMOULS*

*Aujourd'hui la lutte de libération des Tamouls de Srilanka achève un nouveau phénomène. En même temps, non seulement que le gouvernement prenait les mesures de suppression des luttes des Tamouls, mais faisait courir des mauvaises propagandes contre le peuple Tamoul à l'échelon international. Le gouvernement de Srilanka qualifie les combattants de la libération en tant que des terroristes et changea ainsi la lutte de la libération en actes de terrorisme, dont les publications ne manquent pas, diffusant ces mensonges sur la scène internationale.*

*Dans ces circonstances, nous sommes dans l'obligation d'apporter les faits réels au public qui font mensonges du gouvernement, ainsi que la mauvaise interprétation de la lutte de libération des Tamouls.*

*Le terrorisme d'état contre les Tamouls en 1983 au mois de juillet, les assassinats arbitraires, et les emeutes communes continuelles depuis 1956, sont les témoinages accusant le gouvernement d'avoir pri des mesures à supprimer les Tamouls, particulièrement par l'actuel gouvernement, composé des membres du partie national unifié.*

*Nous souhaitons de pouvoir apporter les faits à l'intention du peuple du fait que l'Amnesty international, la commission internationale des juristes et d'autres organismes mondiaux des droits de l'homme, continuent à desapprouver la violation sans cesse des droits de l'homme par le gouvernement Srilankais.*

*La communauté Tamoule est une nation civilisée; elle a sa propre culture, tradition et possède une langue très ancienne. Cette communauté n'a jamais aimé et approuvé le terrorisme. Elle est une nation opprimée et elle continue à lutter pour l'Eelam, pour une autodétermination. Pour ce-ci Tamoul Murasu croit que tout le peuple apporte son soutien à la lutte légitime, à la lutte juste pour la libération d'Eelam.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 36 HABITATIONS TAMOULES DEMOLIES A TRINCOMALEE.

Le 4 juillet 1984, un fonctionnaire de Trincomalee ordonna la demolition de 36 habitations Tamoules dans le port de Trincomalee. Ces 36 habitations ont été immédiatement demoliés par la police et l'armée.

Ces 36 familles ont été accueuillies par l'organisation de la jeunesse Hindou de Trincomalee. Ces Tamouls sont des victimes d'émeutes communes en août 1977.

Le gouvernement prenait des mesures chassant des Tamouls du port de Trincomalee. En faisant ce-ci, le gouvernement pense pouvoir réduire les protestations qui pourraient en resulter, en donnant aux U.S.A. le port à l'usage une base navale. Sur le conseil de l'impérialiste américain par ce moyen d'anéantissement, la reduction de la population tamoule pourrait être obtenue sur le port de Trincomalee.

## TAMOULS DE COLOMBO SOUS LA FOUILLE CONSTANTE

Les tamouls de Colombo sont obligés de porter leur carte d'identité quand ils quittent leurs maisons et ceux qui ne les ont pas, ont été interrogés.

Aussi, quand les Tamouls entrent dans les établissements publics, leurs identités ont été demandées par l'armée. Maintenant le gouvernement suspect tout le monde car il croit que tout le monde fait partie de la communauté Tamoule. Cette mesure ont été pris depuis qu'une bombe de grande puissance a été trouvée dans le cabinet du ministre de Sécurité Nationale Mr.Lalith Athulad Mudali le 30 juin 1984.

En même temps les tamouls de Colombo ont de la crainte d'être impliqués dans un problème ethnic quelconque. Ce-ci serait écrasé par l'armée.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ABSENT DE PROGRES AUX POURPARLERS ENTRE INDRA GANDHI ET J.R.JEYAWARDENE.

Le premier ministre Indien, Mme. Indra Gandhi et le président de Srilanka Mr.J.R.Jeyawardene, ont eu des pourparlers à New Delhi le 3 juillet 1984, dont il s'agit des problèmes des Tamouls en Srilanka. Leur entrevue a durée des heures, portant sur les problèmes Tamouls de Srilanka, mais finalement cette entrevue ne porte pas ses fruits en ce qui concerne la solution. Mr.J.R.Jeyawardene, dès son retour à Srilanka, déclara que les leaders Tamouls ne sont pas coopératifs à la conférence de la table ronde, pour resoudre les problèmes de Tamouls. Prétendant de vouloir chercher une solution pour lesdits problèmes par une conférence de table ronde, Mr.Jeyawardene, préparait une autre solution, la solution militaire.

## HARTAL A LA VEILLE DU MEMORABLE JOUR DU POGROM DE JUILLET 1983.

Deux jours d'hartal (grève des établissements scolaires, fermetures des locaux commerciaux, fermetures des cinémas etc.) ont été tenus dans les régions Tamouls du 25 et 26 juillet. Cet hartal était l'iniative de l'organisation pour la libération des Tamouls et celle du Front Uni de Libération des Tamouls. Cet hartal a été suivi avec succès dans les départements de Trincomalee, Batticoloa, Jaffna, Vavuniya, Mannar, Mullaitivu et Kilinochchi. Ce-ci a été organisé à la veille du mémorable jour de la massacre des 52 prisonniers politiques dans une prison, favorisée par les agents et les forces du gouvernement se trouvant sur place le 25 et 27 juillet 1983.

Les écoliers ont désserté leurs établissements dans les régions nord et est de l'île. Les plus part des établissements scolaires fermaient leurs portes à midi. A la ville de Vavuniya l'armée a dû forcer des commerçants d'ouvrir leurs commerces et dans l'après midi ceux-ci sont aussi fermés.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A la ville de Vavuniya l'armée a dû forcer des commerçants d'ouvrir leurs commerces et dans l'après midi ceux-ci sont aussi fermés.

Dans la ville de Jaffna, à peu près 90% des fonctionnaires se ne sont pas présentés, car le transport en commune a été paralysé.

Quelques attentats à la bombe ont été signalé à Jaffna et Vavuniya.

L'hartal complet, explique la situation que tout peuple Tamoul desapprouve la position du gouvernement en renforçant les forces armées dans les régions Tamouls, en cherchant une solution au problème Tamoul en employant l'armée.

## ARRESTATION ARBITRAIRE A BATTICOLOA

A peu près 200 jeunes Tamouls ont été arrêtés à Batticoloa, conduits à la prison d'Amparai et détenus dans des cellules étroites, la plus part des temps. Cette arrestation arbitraire par masse a eu lieu après qu'un poste de police dans le camp central d'Amparai a été attaqué. Cependant à peu près 20 étudiants ont été arrêtés dans la région de l'est pour avoir posé des affiches sur les murs, le 23.06.1984.

## CENSURE AUSSI SUR LES AGENTS DE PRESSE ETRANGERE

La censure sur la presse a été étendue aux agences de presse étrangère par le gouvernement Srilankais, depuis le milieu du mois de juin. Auparavant la censure de presse était appliquable uniquement sur les presses locales. Selon le nouveau règlement, les écrits des journalistes étrangèrs sont passibles devant la censure avant d'être communiqués à l'étrangèr: ce-ci a été annoncé par le cabinet du ministre d'information Mr.Douglas Liyanage.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





LES PERSONNES QUI SONT TUES PAR LES ARMEES

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## L'IMPOSITION DE LOI A LAQUELLE LES FEMMES SONT AUTORISEES A TRAVAILLER LA NUIT

Le gouvernement de Srilanka propose une nouvelle loi au sein du parlement et elle a été adoptée le 20 juillet 1984, dont il s'agit d'autoriser aux propriétaires du Free Trade Zone Factory d'employer les femmes pendant la nuit même après 22 heures. Le but du gouvernement c'est d'autoriser l'exploitation maximum des forces de travail féminines. Mais en ce qui concerne le transport sur le lieu de travail et autres avantages ne figurent pas dans le projet de loi. A peu près 1300 femmes en cours et pour une période de 3 mois, demandent l'augmentation des salaires et des avantages sociaux, leurs demandes ont été rejetées par les autorités compétentes. Egalement une protestation massive a été lancée par elles en ce qui concerne l'interdiction d'employer les toilettes durant les heures de travail dans les usines dans le zône de libres échanges.

L'imposition de loi au sein du parlement en employant les femmes et que celles-ci pouvaient être retenues jusqu'à minuit, devient une nouvelle forme d'exploitation de masse exercée par la classe dirigeante.

POUR TOUTES LES CORROSPONDANCES

L'EDITEUR
TAMOUL MURASU
CONSEIL DE LA LIBERATION DE TAMOUL EELAM
10,RUE DES MARTYRS
75009-PARIS
FRANCE

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# CIVILISATION DE SRI LANKA

PUBLIE PAR

CONSEIL DE LA LIBERATION DE TAMOUL EELAM (FRANCE)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org